665
ாழில்
INDUSTRY
பெருமாள் உடையார்
15-2-59
OF THE REGISTRA
MADRAS

PHONE : 4305 Grams : "GOODHEART"

MURLIMAL SANTRAM & CO.,

(MADRAS) PRIVATE LTD.,

GOVERNMENT CONTROLLED STOCKISTS OF
STEEL & PIPES

13, Sembudoss Street, MADRAS-1.

★

Pipes available from Ready Stock,

GALVANISED, BLACK AND STEAM QUALITY

PIPES ½" TO 6" FROM

TATA / S & L AND BEST IMPORTED AND ALSO

PIPE FITTINGS - IN ALL SIZES.

CONTACT FOR REQUIREMENTS.

"ஜீப்" மார்க்கு

எலக்ட்ரோ பிளேட் சாமான்கள்

அனுபவமும் பிரசித்திப் பெற்றதுமான

கிரேட் ஈஸ்டர்ன் கமர்ஷியல்

கார்ப்பரேஷன் லிமிடெட்டாரால்

தயாரிக்கப்பட்ட

பித்தளை, ஸ்டீல், நிக்கல் சாமான்களின் மீது கியாரண்டியான வெள்ளி, நிக்கல், குரோமியத்தால் உத்திரவாதமான எலக்ட்ரோ பிளேடிங் செய்யப்பட்ட தாம்பூலத்தட்டு, ஆப்பிள் டிசைன் பௌடர் பெட்டிகள், டீ செட்டுகள், ஸ்பூன்கள், டேபிள் போர்க்கு, சகலவித ஸ்பூன்கள், குருவெட் செட்டுகள், பலவித தட்டுகள், டிரேக்கள் அநேக ரக சிகரெட் கேஸ்கள், ஐஸ் கிரீம் ஸ்பூன்கள், கத்திகள், மற்றும் பலவித நூதன அழகான ரகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

★

S. C. SHAH

9, BUNDER ST., MADRAS-1

வ. உ. சி.
கலைக்கூடம்

(சென்னை அரசினர் உதவிப்பெற்றது)

முதல் மந்திரி

ஸ்ரீ K. காமராஜ் அவர்கள்

16—2—59 திங்கள் மாலை 6-30 மணிக்கு
திறந்துவைப்பார்.

பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

உரிமையாளர் :
R. T. கிருஷ்ணமூர்த்தி

அணுகுக :

வ. உ. சி. கலைக்கூடம்

பூந்தோட்டம்,

35/60, சந்நிதி தெரு, வடபழநி,

சென்னை.

தொழில்

இந்த இதழில்

15—2—59

எல்லோருக்கும் கல்விச்
சலுகை ... 5
எலியின் தலையில் மலை ... 7
லிங்கனும் காந்தியும் ... 8
ஈவேராவின் ஏப்போல்வலை ... 10
கைத்தொழில் முறைகள் ... 11
இனிமையைக் கண்டாள் ... 13

தொடர் நாவல் :
இதுதான் காதல் ... 17

சிறு கதைகள் :
விதி ... 33
வட்டியும் முதலும், கிராசை
அதிசயச் சம்பவங்கள் ... [illegible]
சினிமா விமர்சனம் ... 69

கதை கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே

எதிர்பாருங்கள்!

பிரபல துப்பறியும் கதாசிரியர்

கே.ஜி.ராஜ் எழுதும்

மறைந்த
குற்றவாளி

துப்பறியும் தொடர் நவீனம்



1-3-59 இதழில்

ஆரம்பமாகிறது

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1 | சென்னை, 15—2—59 | இதழ் 20

எல்லோருக்கும் கல்விச்சலுகை தேவை

நாகரிக மடைந்துள்ள எந்த நாட்டிலும் கல்விக்கே முதல் சலுகைக் காட்டப்படுகிறது. பொருளாதாரத் துறையிலும், அரசியல், சமூகத்துறைகளிலும் போது மான அறிவும், ஆற்றலும் பெறச் செய்வது கல்வியாத லால் ,அரசாங்கப் பொறுப்பில் அமர்வோர் அதற்கே முதல்சலுகைக் காட்டவேண்டிய அவசியமும் நேர்கிறது.

மற்ற நாடுகள் கல்விக்கு பெருத்த அளவில் சலுகை காட்டுகின்றன. அந்த அளவுக்கு நம்நாட்டில் இல்லை யென்று குறிப்பது தவறல்ல. பெரும்பாலும் சம்பளம் கட்டாமலும், பகலுணவுக்கு வீடு தேடிப்போக வேண்டிய அவசியம் நேராமலும் சிறுவர்க்கு கல்வி போதிப்பதில் அக்கறைக்காட்டுகின்றன நாகரிக முதிர்ச்

208365

சிப் பெற்றுள்ள ஐரோப்பிய நாடுகள். வருங்கால மேதைகளைச் சிருஷ்டிப்பதில் அந்நாட்டினர் கொண்டுள்ள அக்கறை அத்தகையதாய் இருக்கிறது.

நம்நாட்டில் எல்லோரும் சம்பளம் கட்டித்தான் படிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை; ஆயினும், வகுப்பு வாத அடிப்படையில் குறிப்பிட்ட வகுப்பினர்க்கு 'சம்பளமில்லாமல் படிக்கலாம்; பகலுணவு புசிக்கலாம்' என்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

வகுப்புபேதமற்ற நம் அரசாங்கத்தில் வகுப்பின் பெயரால் சலுகை வழங்கப்படுவது வருந்துதற்குரியதே!

சில ஆண்டுகளுக்குமுன் கல்வித்துறையில் சமநோக்குக் காட்ட நம் அரசாங்கம் முயன்றபோது வகுப்புவாதக் கூட்டத்தார் பேய்க்கோலங்கொண்டு பெரு முழக்கமிட்டனர்.

அதன் பயனாய் கல்வித்துறையில் வகுப்பு வாத முறையை அரசாங்கம் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

எதிர்ப்பை தொழிலாய்க் கொண்டபிற்போக்காளர்களின் ஆரவாரத்திற்காக ஒன்றை செய்தல் என்பது சரியல்ல வென்பதே நமது அபிப்பிராயம்.

ஜாதியில் தாழ்த்தப்பட்டவன் என்ற காரணம் காட்டப்படுவதற்கு பதிலாய், பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டுள்ளவன் என்ற பரந்தமனப்பான்மை காட்டப்பட்டால், கல்வியில் சிறந்த பல மேதைகளைக் காணலாம். வருங்கால மேதைகளை வறுமைக்காரணமாய் வழி மறித்து விடக்கூடாது.

அதுநிற்க,

தற்போது உதவிபெற்ற ஆரம்பப்பள்ளிக் கூடங்கள் மூடப்படும் நிலையிலிருப்பதாய் கூறப்படுகிறது. சம்பளம் வசூலிக்கக் கூடாதென்ற அரசாங்க உத்தரவே காரணமாம். இதுவரவேற்கத்தக்கது தான். தாங்கள் சகலவித உதவிகளையும் அளித்து விட்டு சம்பளம் வசூ

விக்கக் கூடாதென்ற உத்தரவைப் பிறப்பித்தால் மிச் மிக நலமே! ஓரளவு உதவியைச் செய்து விட்டு மற்ற செலவினங்களை ஈடு செய்ய வழிவகை கோலாமல் சம்ப ளம் வசூலிக்காதே யென்றால் என்ன ஆகும்? மூடுவிழா தான் முடிவாக அமையும்.

அவ்வித அசம்பாவிதம் நேராதவாறு எல்லாவித செலவினங்களையும் ஈடுசெய்யும் அளவுக்கு அரசாங்கம் மானியமளித்து சம்பளம் வசூலிக்காத நிலையை உண்டு பண்ணுவார்களென் றெதிர்பார்க்கிறோம்.

எலியின் தலையில் மலை

சின்னஞ் சிறு வாரமாத இதழ்கள் கூட புதியதோர் தபால் இலாகா கெடுபிடிக்கு உள்ளாகி யிருக்கின்றன. கதைகள், கவிதைகள், கட்டுரைகள், விளம்பரங்கள் இவை யெல்லாம் சேர்ந்த அதே அளவுக்கு அரசியல் செய்திகள் பிரசுரிக்கப்படவேண்டுமாம். இதுவரை சட்டத்திலே இருந்துங்கூட அமல் செய்யப்படாதிருந்ததாம் இந்த விதி. இதைக் கண்டிப்பாய் அமல் நடத்தவேண்டும். இல்லையேல் 2 புதுக்காசு தபால் தலை ஒட்டும் சலுகை ரத்தாகி விடும். 8-புதுக்காசு தபால் தலை யொட்டி அனுப்புவது எலியின் தலையில் மலையைத் தூக்கிவைப்பதாகவே முடியும்.

தபால் இலாகா இந்தப் புது நிர்ப்பந்தத்தைத் தவிர்க்கவுடனடியாய் ஆவன செய்யவேண்டும். இம் மாதிரி நிர்ப்பந்தங்கள் எப்போதுமே ஏற்படாமலி ருப்பதுதான் எழுத்துச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதின் பொருளாகும். ஜனநாயகம், சுதந்தரம், மாதிரிசோஷலிஸம் என்றெல்லாம பேசப்படுவதைப் பொய்யாக்கும் இம்மாதிரி நடவடிக்கைகள் வேண்டாம் என்றுதான் தேசாபிமானம் கொண்ட எவனும் கூறுவான்.

இந்த அதிர்ச்சி தரும் நடவடிக்கையை உடனடியாய் ரத்து செய்வதுதான் விவேகம் என்று வார மாத சஞ்சிகைகளும் ஏகோபித்து குரல் எழுப்புகின்றன. அர சாங்கம் ஆவன செய்யட்டும்.

உலகப் பெரியார்களான "காந்தியும்—லிங்கனும்"



★ லிங்கனும் காந்தியும் ★

லிங்கன், காந்திஜி இருவருடைய வாழ்க்கை வரலாறுகளில் சில ஒற்றுமைகள் தெளிவாகப் புலப்படும். இருவரும் பொது வாழ்க்கையில் ஈடுபட அவர்களது தனி வாழ்க்கை மங்கிமறைந்தது. நேர்மை என்றால் இருவருக்கும் உயிர். உறுதியாகக் கடைப்பிடித்த தத்தம் கொள்கைகளுக்காக அவர்கள் தம் உயிரையும் இழக்கத் தயாராயிருந்தனர். நீக்ரோ அடிமைகளை விடுவிக்க வேண்டுமென்று லிங்கன் போராடினார், தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா காந்தி போராடினார். அவர்கள் இருவருமே கொலைக்காரர்கள் கையினால் உயிர் துறந்தனர்.

காந்தியைப் போலவே லிங்கனும் வரலாற்றுப் புகழ் படைத்தவர். லிங்கன் இருந்தபோதும் வரலாற்றை ஆக்கினார்: இறந்த பின்னும் அதனை அதிகமாக உருவாக்கினார். லிங்கன் எளிய குடும்பத்தில் பிறந்தவர்; இளமையில் கடுமையாகப் பாடுபட்டவர். அவர் தம் வாழ்நாளில் வீட்டிலும் வெளியிலும் பல இன்னல்களைப் பொறுக்க வேண்டியவரானார்.

சமயத்துறையில் சகிப்பு

மகாத்மா காந்திக்கு மக்களின் ஆன்மீக வாழ்வே அதி முக்கிய பணி. மக்களுடைய செயல்களெல்லாம் ஆன்மீக வாழ்வுக்காகவே யாகும். அரசியல், பொருளாதாரம், மற்றச் சமூக நடவடிக்கைகள் எல்லாம் மக்களின் ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு வசதியாக விளங்கக்கூடிய வாறு அமைய வேண்டுமே ஒழிய வேறல்ல. மக்களை மக்கள் அடிமைப்படுத்தி ஆளுவதற்கும் சுரண்டுவதற்கும் முக்கிய காரணம் சமயத் துறையில் சகிப்பின்மையும் பொருளாதாரப் பேராசையுமாகும். ஆகவே, அஹிம்சைதான் மனிதனின் செயல்கள் எல்லாவற்றுக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்றார் காந்திஜி

ஈ. வே. ராவின் நப்போல் வளை

நாணலைப்போல் வளையும் சுபாவமுள்ள பலரை நாம் காண முடிகிறது. அந்த ஞானவளைவை முன்னெல்லாம் கண்டோம். ஈ. வெ. ரா. பெரியாரிடம். இப்போதும் காண்கிறோம்.

கான்பூரில் நடந்த ரிபப்ளிகன் கூட்டத்தில் பேசிய ஈ. வெ. ரா. "இந்தியாவில் ஜாதிக்கொடுமையை ஒழிக்க வடநாட்டு பிற்பட்ட வகுப்பினரும், தென்னாட்டு தாழ்த்தப்பட்டோரும் கூட்டணி அமைக்கவேண்டும், வடநாட்டு அரிஜனங்களும், தென்னாட்டு சூத்திரர்களும் வெவ்வேறு அல்ல, எல்லா தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பௌத்த மதத்தில் சேரவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

வடநாட்டானை தென்னாட்டிலிருந்து விரட்டும் யோக்கியதைகளைப் பாருங்கள். ஜாதிக்கொடுமை அங்கேயும் இருக்கிற தென்பதை உணராமல் முரட்டுத்தனமாய் எல்லோரையும்பார்த்து கூக்குரலிட்ட ஈ. வெ. ரா. இப்போதுதான் ஞானோதயமடைந்தாரா? கூட்டணி வேண்டுமென்கிறார் இப்போது, வடநாட்டுஅரிஜனங்களும், தென்நாட்டு சூத்திரர்களும் வேறல்லவாம். அது மாத்திரமா? மதம் கூடாது என்று தாண்டிக் குதித்தவர் பௌத்தமதத்தை வளர்ப்பதில் ஆர்வங் காட்டுகிறார்.

அத்துடன் மனப்பூர்வமான சகிப்புத் தன்மையும் மிக்க எளிய வாழ்க்கையும் வேண்டும் என்றார்.

காந்திஜியும் ஆபிரகாம் லிங்கனும போதித்தவை உலகில் இன்னும் பரவ வேண்டும்; உலக மக்கள் அனைவருக்கும் அவை பொதுச் சொத்தாக வேண்டும் என்பதே நமது அவா.

ஈரோட்டு ராமனின் இந்த திருவிளையாடலெல்லாம் தசரதராமனுக்கே அர்ப்பணம்.

—"கோமான்"

சாயத் தொழில்

—[எம். எஸ். மணி]—

நூல் துணிக்கு சாயமேற்றல்

வீட்டிலிருந்தபடி ஸ்திரீகளே சாய மேற்றக் கூடிய முறைகள்.

பச்சை, சிகப்பு, மஞ்சள், வைலட், கருப்பு, ஆரஞ்சு, நீலம் இவைகளில் குறிப்பிட்ட எதுவா யிருந்தா லும் டைரக்ட் கலராக இருக்க வேண்டும். 8 கஜமுள்ள துணிக்கு 2½ தோலா சாயம் தேவை. ஓர் கோப்பையில் $1/8$ படி தண்ணீர் ஊற்றி அதில் பவுரைக் கொட்டி குழைத்துக் கொள்ளவும். ஒரு பக்கெட் அளவு தண்ணீரை கொதிக்க வைக்கவும். அந்தத் தண்ணீரில் இரண்டு கைப்பிடி யளவு சாப்பாட்டு உப்பைப் போட்டுக் கரைத்துக் கொள்ளவும். அதன்பின் கரைத்து வைத்துள்ள சாயத்தை அதில் ஊற்றிக் கலக்கவும். எந்தத் துணியில் சாயம் ஏற்றவேண்டுமோ அந்தத் துணியை நன்றாய்த் துவைத்துப் பிழிந்து கொதிக்கும் சாயம் கலந்தத் தண்ணீரில் போட்டுப்புரட்டி கீழே இறக்கி ட மணி நேரம் விட்டு வைக்கவும், அதன் பின் எடுத்துப் பிழிந்து உலர்த்திக் கொள்ளவும். சாயம் முழுதும் துணியிலேறிவிடும்—

பாத்திரத்தில் வெறுந் தண்ணீரே காணப்படும்.

பட்டுத் துணிக்கு சாயமேற்றல்

எந்த வர்ணம் தேவையோ அந்த வர்ணம் டைரக்ட் டாக இருக்கக்கூடாது. பேசிக் கலராக இருக்கவேண்டும். 8-கஜ துணிக்கு 2½ தோலா சாயம் சேர்க்கவேண்டும்.

5 - பலம் கடுக்காயை இடித்து கொட்டை நீக்கி கஷாயமாக்கவும்,

துணியை சோப் போட்டு அல்லது துவைத்துக்கொள்ளவும்,

சிறு பாத்திரத்தில் தண்ணீரை கொதிக்க வைத்து அதில் சாயத்தைக் கரைத்துக் கொள்ளவும்.

கடுக்காய் கஷாயத்தில் துணியை ஊறப் போட்டு பிறகு சாயம் கரைத்துள்ள நீரில் துணியைப் பிழிந்து போட்டு 4 மணி நேரம் சென்று எடுக்க சாயம் ஏறி விடும்.

ஸ்ரீமதி இந்திரா காந்தி புதிய காங்கிரஸ் தலைவர்

பிரதமர் நேருவின் மகளான ஸ்ரீமதி இந்திரா காந்தி அகில இந்திய காங்கிரஸ் மகா சபை தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

H. M. H. பொன்னுங் கண்ணி கிரைத் தைலம் நீண்ட காலமாய் தமிழ் மக்களிடையே உபயோகத்திலிருந்து வருகிற தென்பதை நாமறிவோம். மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும், தேகாரோக்கியமும் தரக்கூடிய தென்பதை பலரும் அனுபவத்தால் அறிந்தே இருக்கின்றனர். கோடை வெப்பத்தால் தாக்கப்பட்டோர்க்கு இது தக்க தோர் பாதுகாப்பாகும். மூலிகைகளாலும், கடைச்சரக்குகளாலும் யூனனி சித்த ஆயுர்வேத முறைகளை யனுசரித்து தயாரிக்கப்படுவதால் இதை பலரும் வாங்கி உபயோகிக்குமாறு சிபாரிசு செய்கிறோம்.

தயாரிப்பவர் :

H. முகமது ஹுசேன்,
யூனனி டாக்டர்
நெ. 17, ராமசாமி செட்டி தெரு,
புளியந்தோப்பு, சென்னை-12

இனிமையைக் கண்டாள்

ஒத்தமனம், ஒருமித்தப் பண்பாடு; இவற்றின் அடிப்படையில் வாழ்க்கை நடத்தும் தம்பதிகளைக் கண்டு மற்றோர் மனம் பூரிப்பது இயற்கையே! 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுப் பட்டதே இன்பம்' என்பது முதுமொழியல்லவா? தென்றல் தவழும் மலர்ச் சோலை

"கே. ஜி. ராஜு"

யைக்கண்டு இன்பமுறாதிருக்க எவரால் ஆகும்? வாலிப மிடுக்கு; வளமான உடற்கட்டு, சீரிய ஒழுக்கம்; சிறந்த பழக்கம்; அந்நியர் பாராட்டும் அடக்கமான வாழ்க்கைத்தரம். இவைபோன்ற பாராட்டத்தக்கப் பண்புகள் செறிந்தவனை கணவனும் அடைந்தவள் ஒப்புமிக்கு மற்றவளாய்த்தானே விளங்குதல் கூடும்? வண்ணக் கிளியென வாயாரப் புகழ்த்தக்க அழகு படைத்தவளும், ஒழுக்க சீலமும், உயர்குண நலங்களும் ஒருங்கமைந்தவளுமான அவளை மற்றோர் ஏற்றவும் போற்றவும் பின்னடையாரன்றோ!

இளந் தம்பதிகள்:

அன்றிற் பறவைகள்போல் ஒன்றித்த மனநிலையில் வாழ்ந்தனர்.

மனைவியான மங்கையைக் காணவந்தாள் அவள் தோழியொருத்தி. முகமன் கூறி வரவேற்றாள் மங்கை. அளவளாவிப் பேசினர் மங்கையும், தோழியும். குடும்ப நிர்வாக சம்பந்தமாய்ப் பேசி முடிந்தபின் கணவனின் குண நலன்களைப் பற்றி வினவினாள் தோழி.

மங்கையளிக்கும் பதில் இது:

"தோழி! என் கணவர் சொல் தவறுதவர். நேர்மை வழுவாதவர்; காதலியாம்

என்னைக் கைவிடமாட்டார். அவர் அன்பு—மாருதது; நிலையானது. எம் வாழ்நாள் முற்றும் அது வளர் பிறையென ஓங்கும், நளினமான பண்பாடுகள் நாட்கள் செல்லச் செல்ல வளர்ச்சியடையுமேயன்றி குறைவுப் பட்டு விடாது. என்னைப் பிரிந்து வாழ அவர் எண்ணமே கொள்ளமாட்டார்.''

இவ்வாறு கூறிவிட்டு சிந்தனையை எங்கோ செல்ல விட்டாள் அவள்.

அன்ருெரு நாள் காலை நேரம். தண்ணீர் திரட்டிவர குடமேந்தி தாமரை தடாகத்தை யடைந்தாள். தண்ணீரில் இறங்கியதும் நீரின் அலை மோதலால் மலர்ந்திருந்த தாமரைமலர்கள் அசைந்தாடின. தளிரித ழ் களை விரித்திருந்த தாமரை மலர்களிலிருந்து வெளிக்கிளம்பிய வண்டுகள் ரீங்காரமிட்டுப் பறந்தன. அவை, அருகே இருந்த சந்தன மரத்தை நோக்கி விரைந்தன. அதிலே கட்டியிருந்த தேன் கூட்டிற்குள் நுழைந்தன வண்டுகள்.

அந்தக்காட்சி அப்போது அவள் நினைவுக்கு வந்தது. கூறினாள் தொடர்ந்து:

''தோழி! தேன் இல்லா மலர்கள் இல்லை. தேன் அடைகள் எங்குமே கட்டப் படுவது உண்டு. அவைகளையெல்லாம் சிறந்தன வாய்க் கூறிவிட முடியாது. தாமரை மலரிலிருந்து எடுத்துச் சென்று கந்தங் கமழும் சந்தனமரத்தில் அடைகட்டி அதிலே சேமித்து வைக்கப்படுகிற தேதுவோ, அதுவே தூய்மையானதும், சுவைமிக்கதுமான தேன், அந்தத் தேனுக்கு ஒப்பானவர் என் கணவர். அதுபோல் நான் அவர் மேல் கொண்ட காதலும் தூய்மையானது, இனிமையானது.''

இவ்வாறு கூறி அகமகிழ்ந்தாள் மங்கை. தோழி அவள் அறிவுத்திறனை வியந்தாள்.

அவள் சொன்ன அபிப்பிராயம் தேவகானம் போல் ஒலித்தது தோழியின் செவியில். அதுவே இது:

''நின்ற சொல்லர்; நீடுதோன்று இனியர்;
என்றும் என்தோள் பிரிபு அறியலரே;
தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந் தேன் போலப்
புரையமன்ற; புரையோர் கேண்மை''!
—நற்றிணை

தாது-தேன். ஊதி-உண்டு. புரைய-தூய்மை உடைய.

நவாப் ஸ்ரீ டி. எஸ். ராஜமாணிக்கத்தின் நாடகக் குழுவினர் 6—2—59 வெள்ளி முதல் தசாவதாரம் நாடகத்தை சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடத்தி வருகின்றனர். நாடக ஆரம்ப விழா சென்னை ஷெரீப் ஸ்ரீ வி. எம்பெருமானூர் தலைமையில் நடந்தது. தலைவர் நாடக சபைத் தலைவரின் கலைத்தொண்டையும், தேசிய தெய்வீக பக்திப்பிரசாரத்தையும் பாராட்டிப் பேசினார். ஸ்ரீ ராஜமாணிக்கம் தக்கவாறு நன்றி தெரிவித்துப் பேசினார்.

தென் நாட்டைப் பொறுத்தவரையில் நாடக சினிமா நடிகர்களென்றால் நாத்திகர்களென்றே, நல்லதைப் பழிக்கும் தி.மு.க. களென்றே தான் நினைக்க முடிகிறது. அந்த நினைப்பிற்கு விதிவிலக்காயுள்ளது நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகக் குழு. இக்குழுவினர் நடிக்கும் நாடகங்களில் தெய்வீகம் கமழ்கிறது. தேசபக்தி கொந்தளிக்கிறது. சத்தியம், சன்மார்க்கம், நீதி, நேர்மை போன்ற புனித கோட்பாடுகள் மிளிர்கின்றன.

இந்நாடகக் குழுவினர்க்கெதிராய்—அவர்கள் கொள்கைக்கு மாறாய் நாத்திகப் புயல் வீசத் தலைப்பட்டக் காலமும் உண்டு. அந்த நாத்திக எதிர்ப்பு நாசமடைந்து புராதன புனித கோட்பாடு தலை நிமிர்ந்தது. அதற்கு அறிகுறியே கால் நூற்றாண்டைக் கடந்து

விட்டிருக்கும் நவாப் ராஜ மாணிக்கத்தின் தேவிசபை.

தசாவதார நாடகத்திலே வைகுந்த காட்சியும், கருடாரூடரான நாராயணன் தோற்றமும், கலிபுருடன் காணப்படுதலும், மச்சாவதார (மச்சம் கடலில்செய்யும் போர்)த்தின் மனத்தைப்பறிக்கும் இயக்கமும் மறக்கத்தக்கனவல்ல.

மற்றும் நவாப் ராஜமாணிக்கம் இரண்யனைத் தோன்றி உள்ளக் கிளர்ச்சியோடு நடித்து ரஸிகர் மனத்தைக் கவர்ந்து விடுகிருர். பிறவிநடிகரல்லவா? நாரதராய் நடிக்கும் சிறுவனின் இசை இனிமைப்பாராட்டத்தக்கது. மோகினி வேடம்தரிப்பவரிடம் வேடம் நடிப்பு பேச்சு, பாட்டு முதலிய எல்லா அம்சங்களும் சிறப்புற காணப்படுகின்றன.

நவாப் ராஜமாணிக்கம் கலைத்தொண்டோடு அமைந்து விடவில்லை. கோ சம்ரட்சணபிரசாரத்திலும் அவர் தீவிரங்காட்டுகிருர். நவாப் ராஜமாணிக்கமும், அவரின் தேவி சபையும் பல்லாண்டு வாழ்ந்து பவித்திரமான தொண்டு புரிய பிரார்த்திக்கிருேம்.

—"கோமான்."

தொழில் ஆண்டு மலர்

நம் "தொழில்" சஞ்சிகை மாதம் இருமுறையாய் வெளிவந்து கொண்டிருப்பதை தாங்கள் அறிவீர்கள். "தொழில்" பற்பல முன்னேற்ற அம்சங்களோடு, பிரபல எழுத்தாளர்களின், கட்டுரை, கதை, கவிதை, கலை, விஞ்ஞானம், ஆராய்ச்சி, விமர்சனம் முதலியவைகளோடும், பிரபல அரசியல் தலைவர்களின் செய்திகளோடும் ஏப்ரலில் வெளிவருகிறது.

வாசகநேயர்கள், ஏஜண்டு அன்பர்கள் விளம்பரம் தந்து உதவும்வர்த்தக ஸ்தாபனத்தார் ஆகியோர் தங்கள் ஆதரவை நல்க வேண்டுகிருேம்.

ஏஜண்டு அன்பர்கள் தங்கள் தேவைக்குரிய பிரதிகளுக்கு முன்கூட்டி தெரிவித்து தருவித்துக் கொள்ளவும்.

முன் கதை...........

உறுப்பினர் * * * *

லலிதா, கணேசன், சுந்தரம், சாந்தா.

மாஜி அரசாங்க ஊழியரும், தற்போதைய சரஸ்வதி மில் மானேஜருமான சுந்தரத்தின் மகள் லலிதா கணேசனை காதலிக்கிறாள். தாய் மாமன் சிவகுமார் அவர்கள்காதலில் குறுக்கிடுகிறான். பூங்காவில் காதலர்களைக் கண்ட சிவகுமார் சீற்றமடைந்து நிந்திக்க கணேசன் அவனைத்தாக்கி வீழ்த்துகிறான். அந்தச் சமயம் சுந்தரம் அங்கே வர லலிதா மாமன்மேலேயே குற்றத்தை சுமத்துகிறாள். கோபமடைந்த சிவகுமார் சுந்தரத்தை நிந்தித்துவிட்டு வெளியேறுகிறான். அதன்பின் லலிதாவை வெளியே செல்ல சுந்தரம் அனுமதிக்கவில்லை. அந்நிலையில்...........

* . * * * *

அடுத்து நடப்பனவற்றைத் தொடர்ந்து படியுங்கள்:

13 விரைவிலே வந்தான்; விரைந்தோடி சென்றான்

செங்கதிரோன் மேல்முகட்டை கடந்துக் கொண்டிருந்தான். கடிதத்தை கொடுத்துவிட்டுச் சென்ற கணேசன் என்ன நினைத்து விட்டானோ; மறுநாள் காலை 10 மணிக்கு தன் காரை எடுத்துக்கொண்டான். அவள் வரவைப்பற்றியறிந்து போக நேரே லலிதாவின் வீட்டை நோக்கி காரை ஓட்டிக்கொண்டு வந்தான். காதல் வெறியால் நிதானமிழந்து விட்டிருந்தானானதால் உடனடியாய்ப் போவது சரியல்லவென்று அவன் அறியாதது விந்தையல்ல.

சுந்தரமும் சுசீலாவும் தோட்டத்தில் இருக்கும் செடிகளுக்கு கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்தி ஊற்றிக் கொண்டிருந்தார்கள். லலிதா தாழ்வாரத்தில் அலங்காரம் செய்து கொண்டு தன் கையில் இருக்கும் டம்பப் பையை சுழற்றிய படி உலாவிக் கொண்டிருந்தாள.

கணேசன் காரை திடீரென்று அவள் வீட்டு வாசல் முன் கொண்டுபோய் நிறுத்தினான். கதவைத் திறந்துக்கொண்டு தலையைக் கீழே பார்த்தபடி சரேலென்று உள்ளே நுழைந்தான். கணேசனைக் கண்டதும் லலிதாவுக்கு தூக்கிவாரிப் போட்டுவிட்டது. ஜ்வலிக்கும் முகத்தோடு ஓடிவந்தாள். 'கணேஷ்!' என்று தன் கையை நீட்டினாள்.

அதேசமயம், சுந்தரம் 'லலிதா!...லலிதா!என்னம்மா செய்கிறாய்? மேஜையின் மீது கண்ணாடியை வைத்திருக்கிறேன், அதை எடுத்துக்கொண்டு வர்ம்மா' என்று கூவியது இருவரையும் கிடுகிடுத்துப்போகும்படிச் செய்தது.

"கணேஷ்! போய்விடுங்கள். இன்று எப்படியாவது நான் மாலைவந்து விடுகிறேன். அவர்கள் வந்து விடுவார்கள்போல் தெரிகிறது" என்று கூறிவிட்டு மேஜையின் மேல் இருக்கும் மூக்குக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள். அவள் பார்வை அவனையே வட்டமிட்டது.

கணேசன் தாராளமாய் அவளிடம் பேச முடியாமல் மன வருத்தத்துடனே திரும்பி வந்து விட்டான். என்ன செய்வது? 'அவளோ பயப்படுகிறாள்' என்று எண்ணியவாறே காரில் உட்கார்ந்து ஸ்டேரிங்கைப் பிடித்தான்.



கண்ணாடியைக் கொடுத்துவிட்டு அதிவேகத்தில் வந்து பார்த்தாள். கணேசன் கார் மாயமாய் மறைந்து விட்டதைக் கண்டு ஆற்றொண்ணா துயரத்தில் மூழ்கியே விட்டாள்.

ஆபீஸ் போகவேண்டிய சுந்தரம் அன்றும் வீட்டை விட்டுப் புறப்படவில்லை. ஏதோ சில தஸ்தாவேஜுகளை வீட்டிலேயே புரட்டிக் கொண்டிருந்தார். ஏன்? எதற்கென்று அவரை காரணங் கேட்க யாருக்கும் அவ்வளவு மனதைரியமில்லை. அவர் ஆபீஸ் போகாததைப் பற்றி சுசீலாவுக்கு என்ன கவலை? கவலைப்பட வேண்டியவள் லலிதாதான். சுந்தரத்தை பார்க்கும்போதே அவள் நெஞ்சு குமுறி வெடித்தது! உள்ளத்தில் கோபத் தீ கொழுந்து விட்டு எழுந்தது. மாடியைவிட்டு கீழே வந்தாள்-மேலே போனாள். மனம், நிலை கொள்ளவில்லை. இவள் வேதனைப் படுவதை சுந்தரம் எப்படி அறிவார்?

இரவும் வந்தது. அன்று லலிதா தப்பித்துச் செல்ல வேறு வழி இல்லாததால் சிறைவாசத்தை கடக்க முடியாமல் தவித்துக்கிடந்தாள் வீட்டினுள்ளே.

லலிதா எதிரே வருவாள் என்று பெருமிதத்துடன் காரை ஓட்டி வந்த கணேசன் அன்று மாலை ஆறு மணிவரை

எதிர்பார்த்துவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் அடைந்த ஏமாற்றத்துக்கு எல்லையேது? அளவேது?

14 கடிதத்தில் வடித்து வைத்தாள் கன்னியவள் மனநிலையை

மாடியிலே முடங்கிக் கொண்டிருந்த லலிதா கணேசன் மீது கவனத்தை செலுத்தி புது வழியை வகுத்துக் கொண்டிருந்தாள். அவள் வகுக்கும் ஒவ்வொரு குறுக்கு வழியையும் மனக்குரங்கு பிய்த்தெறிந்தது. ஆனால் கடிதத்தைதவிர வேறு வழியில்லை. அதைத்தான் செய்வோமே யென்று கணேசனுக்குத் தபால் எழுத காகிதத்தையும் பேனாவையும் எடுத்து எழுத முற்பட்டாள்.

வேலாயுத முதலி தெரு,
நாகை. 17—7—58

அன்புள்ள கணேஷ்!

நலம், நலமறிய ஆவல்.

உன் கடிதங்களைப் படித்தேன். படித்தேன் என்பது தவறு. உன் இதயக் குமுறலை அந்த ஏட்டிலே கண்டேன். உன் உருவம் நின்று பேசுவதைப் போலிருக்கிறது. என்னை மன்னிக்க வேண்டும்; மீள முடியாத நிலையில் என் தகப்பனர் முற்றுகையிட்டு விட்டார். அது என் குற்றமல்ல! வாழ்க்கையில் புது மணமலராக வாழ்வோம் என்பதில் நம் காதல் வளர்ச்சியே தெளிவாகக் காட்டுகிறது. உன் இதயக் கோயிலிலே நான் குடி கொண்டு விட்டேன் என்று நீ குறிப்பிடுகிருய். ஆமாம்; நானுகே உன் இதயத்தைச் சுவீகரித்துவிட்டது உண்மையே தான். ஆனால் நான நிலைகுலையவில்லை. என் கருத்தை இழக்க வில்லை. புயலில் அலைமோதும் படகைப்போல் என் உள்ளம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. எனினும் உறுதி யென்னும் துடுப்பை நம்பியிருக்கிறேன். என கண் நிறைந்தவன் நீ. கருத்தைக் கவர்ந்தவன் நீ. உன்னேடு சேர்ந்து வாழ்ந்தால் தான் என் உள்ளம் சமாதானமடையும். அதற்காக நம் திருமணம்

நடந்தே ஆகவேண்டும். நான் தயாராய் விட்டேன். உன் நிலை எப்படியோ?

அன்று என் வருகைக்காக எதிர்பார்த்து மன ஏமாற்றமடைந்திருப்பாய் என்று நினைக்கிறேன். இன்றாகிலும் உன்னை சந்திக்கலா மென்று முடிவு கொண்டிருந்தேன். ஆனால் எதிர்பாராத நிலையில் என் தகப்பனார் இன்றும் வீட்டில் தங்கியே விட்டார். ஆகவே நேரில் நான் வரமுடியாமைக்கு மன்னிக்கவும். இந்தக் கடிதத்தின் மூலம் உன்னிடம் நேரில் பேசுவதைப்போல் நினைத்துக் கொள்ளவும்.

இப்படிக்கு,

உன் இதயக் காதலி, லலிதா,

என்று கடிதத்தை எழுதி முடித்தாள். எழுதிய கடிதத்தை வெளியில் தெரியாதபடி தன் ஜாக்கெட்டிற்குள்ளே மறைத்து வைத்துக் கொண்டு மாடியை விட்டு கீழே இறங்கி வந்தாள்.

சில சமயங்களில் நாம் எதிர் பாராதவிதமாய் சம்பவங்கள் நடக்கின்றன. கனவிலும் நினைக்க வியலாத நன்மைகள் நடப்பதும் உண்டு. அந்த நன்மைகளைத் தான் இயற்கையென்றும் தெய்வீகமென்றும் நாம் நினைக்கிறோம். அம்மாதிரி சம்பவமொன்று நடந்தது அப்போது.

தெருவாசற்படியில் யாரோ ஏறி வருவதைப் போல் தெரிந்தது லலிதாவுக்கு. எதிர் நோக்கிச் சென்றாள். கணேசனின் தங்கை சாந்தா தான் ஒய்யாரமாக வந்தவள்.

"யாரது? சாந்தாவா? யாரோவென்று நினைத்து விட்டேன்! வரணும் வரணும்" என்று அவளை வரவேற்றாள். அவளைக் கண்டதும் ஆனந்தம் எல்லைக் கடந்தது லலிதாவுக்கு. அவளைப் பார்த்து சிரித்தாள்—அவளும் சிரித்தாள். சாந்தாவை கட்டி அணைத்துக் கொண்டாள். "வாடி மாடிக்குப் போகலாம்" என்று சாந்தாவை அழைத்துச் சென்றாள் மாடிக்கு.

"லலிதா! யாரம்மா அந்தக் குழந்தை" என்றார் சுந்தரம்.

"என் கிளாஸ்மெட் அப்பா! அடிக்கடி முன்பெல்லாம் வருவாளே என்னை அழைத்துக் கொண்டுபோக, அவள்

M. சுப்ரமண்யம் & பிரதர்ஸ்

(ஞானம்பிகா பிராண்டு)



ஸ்டீல் டிரங்க்கு வியாபாரம்

மூர் மார்கெட்,

சென்னை-3.

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரிகேட்டர்கள்)

எங்களிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த நல்ல ஸ்டீல் சூட் கேஸ், கேபின், பிலிம் பாக்ஸ், இன்னும் இதர டிசைன்கள் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஞானம்பிகா பிராண்டு ஸ்டீல் டிரங்க்கு பெட்டிகளை உபயோகியுங்கள்.

பேக்டரி: நெ. 52, சைடன்ஹாம்ஸ் ரோடு, சென்னை-3

ஷாப்: நெ. 15- பிராக்ந மூர்மார்கெட், சென்னை-3.

இங்ஙனம்.

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ் (பார்ட்னர்ஸ்)

M. கோவிந்தசாமி

M. ராதாகிருஷ்ணன்

தான் இவள். ஏன்? தங்களுக்கு ஞாபகம் இல்லையா?" என்றாள் லலிதா.

"அடடே! அந்தப் பெண்ணு! அடையாளமே தெரியலையே? சவுக்கியமாம்மா" என்றார் அவர்.

"சவுக்கிய மாய்த்தான் இருக்கிறேன்" என்றாள் சாந்தா.

அதற்குமேல் சுந்தரம் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

"ஏண்டி லலிதா! நீ வருவாய் என்று நான் பல முறை எண்ணி எதிர்பார்த்து ஏமாந்தேன். நாடகக் கொட்டகையில் இருந்து என்னை அடியோடு மறந்து விட்டாயே! நடனக் காட்சிகளைப் பார்த்ததும் உன் மனம் மாறிவிட்டதா என்ன? என் அண்ணு கூட சில சமயங்களில் உன்னைப் பற்றி விசாரிப்பார்" என்றாள் சாந்தா.

சாந்தா நீ நினைப்பது தவறு, என்னால் உன்னை மறந்து கூட இருக்க முடியுமா? ஆனால்......

" ஆனால் என்றால் என்ன லலிதா? சொல்லேன்."

லலிதாவின் கண்களில் கண்ணீர் கலங்கியது. "சாந்தா! என் திருமணம் நடக்கும் வரை நான் எங்கும் வெளியில் போகக்கூடாது என்று என் தகப்பனர் தடை உத்திரவு போட்டு விட்டார். என் ஆசைகள் எல்லாம் நொறுங்கிப் போய்விட்டன. இப்போது சிறைவாசத்தில் காலம் கழிக்கிறேன்" என்றாள்.

அவள் நிலையைக் கேட்டதும் சாந்தா அழுதே விட்டாள். "என்ன சட்டமடி இது? வாடி நானே கேட்கிறேன் உன் அப்பாவை" என்று லலிதாவை பிடித்து இழுத்தாள் கீழே.

சாந்தா!......வேண்டாம். அப்பா ரொம்ப கோபப்பட்டுக் கொள்வார். ஹூம்......எத்தனை நாளைக்குத்தான் இந்த சிறைவாசம்? நீ கவலைப்படவேண்டாம். ஏதாவது முக்கிய நிகழ்ச்சிகள் இருந்தால் மாத்திரம் என்னை மறந்து விடாதே" என்றாள் லலிதா.

"என்டி நீ தான் ஒழுக்கமான பெண்ணாச்சே, உன்மீது அவருக்கு என்ன திடீர் சந்தேகம்?"

"அநாவசியமாய் வயது வந்த பெண் ஏன் வெளியில் போகவேண்டும்" என்பதுதான் அவர் முதல் கேள்வி. நீ வேறு தப்பபிப்பிராயம் செய்துக் கொள்ளாதேடி சாந்தா!

இதற்குள் சுசீலா லலிதாவை சாப்பிட அழைத்தாள். சுந்தரமும் சாப்பிட உட்கார்ந்து விட்டார்.

லலிதா சாந்தாவை அழைத்துக்கொண்டு கீழே இறங்கினாள். சாப்பாட்டு நேரம். சாந்தா தட்டிக் கழித்துக்கொண்டு போகப் புறப்பட்டாள். யாவரும் ஒரே பிடியாய் பிடித்து விட்டார்கள். என்ன சொன்னாலும் விடவா போகிறார்கள். எல்லோரும் ஒருங்கே சேர்ந்து சாப்பிட்டு எழுந்தார்கள்.

* * * * * *

பகல் மணி மூன்று. சுந்தரம் டிரஸ் செய்துகொண்டு வெளியில் கிளம்பி விட்டார். சுசீலா ஆயாசமாக கட்டிலின் மீது கண்ணுறங்கிக் கொண்டிருந்தாள். அவர் சென்ற பத்து நிமிஷத்திற்குள் சாந்தாவும் வீட்டிற்குப் போகக் கிளம்பினாள். இருவரும் கீழே இறங்கி வந்தார்கள்.

"சாந்தா! உனக்கு ஒரு பெரிய கடினமான வேலை கொடுக்கப் போகிறேன். தாங்க முடியாத அதை நீ தூக்கித் தான்செல்லவேண்டும்!" என்றாள் லலிதா. அவள் பேச்சில் குறும்பும் உள்ளூர பயமும் கலந்திருந்தன.

"என்னால் தூக்கும் சக்தி யில்லை யென்றால், டாக்ஸியில் வைத்துக் கொண்டு போகிறேன்! இதற்கெல்லாம் பயந்தா போயிடுவேன்" என்றாள் சாந்தா. அவள் வார்த்தை குறும்புத்தனத்தை படம் பிடித்துக் காட்டியது.

லலிதா மேலே ஓடினாள். ஏதோ எடுத்து வருவதைப் போல் மறைவில் நின்று தன் மார்பகத்தில் இருக்கும் கடிதக் கவரை எடுத்து வைத்துக் கொண்டாள். "சாந்தா! மேலே வாயேன்" என்று கூப்பிட்டாள். சாந்தாவும் அவசரம் அவசரமாக மேலே சென்றாள். ஆனால் அவள் கண்டது லலிதாவின் கையில் ஓர் கவரைத்தான்.

" சாந்தா ! இந்த கடிதத்தை பயபக்தியோடு எடுத்துச் செல்லவேஈண்டும்!யாருக்காவது தெரிந்து விட்டால் கௌரவம் குறைந்து விடும்! அப்புறம் என் அப்பா ரொம்பவும் கோபபப்பட்டுக் கொள்வார்! மில் விஷயமாக ஏதோ உன் அண்ணனுக்கு எழுதியிருக்கிருராம். அதனை மறக்காமல் கவரை உன் அண்ணனிடம் கொடுக்கணும் தெரியுமா" என்று கவரை சாந்தாவிடம் கொடுத்தாள் லலிதா.அவள் கைகள் நடுக்கங் கொண்டது. உள்ளம் 'படக்படக்' கென்று அடித்துக்கொண்டது.

" பணம் சம்பந்தமாய்த்தானே? என்ருள் சாந்தா.

"என்க்கென்னடி தெரியும்! எதைப் பற்றி எழுதி யிருக்கிருரோ"

" சரி சரி விஷயத்தை சொல்லிவிட்டாய். இனி கவலை வேண்டாம், சரி தானே!"

சாந்தா கவரைப் பெற்றுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிஞள். 'தன் அப்பா பண லேவா தேவி செய்பவர்.மில்லுக்கும் ஏதோபணம் தேவை யிருக்கலாம்: அதைப பற்றிய கடிதமாய்த்தான எழுதியிருக்க முடியும். நம்

மாலே இன்று ஓர் வியாபாரம் கிடைச்சுது அப்பாவுக்கு" என்று எண்ணினள் சாந்தா. ஆனல் தன் காதல் புயலே கடிதத்தில மடித்து அவளிடம் கொடுத்து பழியை சுந்தரத்தின் மீது போட்டு விட்டாள் கெட்டிக்காரி லலிதா. இவள் சூழ்ச்சி யாருக்கு தெரியப்போகிறது?

15 கண்ணடி பேசிற்று கட்டழகி திட்டினள்

சாந்தா கடிதத்துடன் சென்று தன் வீட்டு வாசற்படி ஏறினள். 'ஞாய் என்று காரின் ஹாரன் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். மனச்சோர்வுடன் கணேசன் காரில் இருந்து இறங்கி வந்தான்.

"அண்ணு! புதியதாக உனக்கொரு 'பிஸினஸ்' கொண்டு வந்திருக்கிறேன்" என்ருள் கடித உறையை காட்டியபடி.

"என்ன சாந்தா அது? கொடம்மா பார்க்கலாம். யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டான் கணேசன்.

"என் சிநேகிதை லலிதா வீட்டிற்குபோய் இருந்தேன். அவள் வீட்டிலே சாப்பிட்டும் தூங்கிவிட்டு வந்தேன். வரும் போது அவள் அப்பா ஏதோ மில் விஷயமாக உனக்கு கடிதம எழுதி கொடுத்ததாக லலிதா இந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்தாள் உன்னிடம் கொடுக்கும்படி. இது விஷயம் யாருக்காவது தெரிந்தால் கௌரவமே போய்விடுமாம்" என்று லலிதா சொல்லியதை அப்படியே ஒப்புவித்து கடிதத்தை கொடுத்தாள் ஏதுமறியாத சாந்தா.

சாந்தா, 'லலிதா' என்று சொன்னதுமே அவன் உள்ளம் மின்சாரம் தாக்கியது போன்ற உணர்ச்சி யடைந்தான். இழந்த இன்பத்தை மீண்டும் அனுபவித்ததைப் போல் இருந்தது. கடிதத்தை பெற்றுக்கொண்டு விர்ரென்று உள்ளே நுழைந்தான்.

உள்ளே சென்ற கணேசன் நேரே மாடியில் இருக்கும் தன் அறைக்குப் போய் விட்டான். அந்த அறையில் தான் அவன் படிப்பதும், டிரஸ் செய்து கொள்ளுவதும். அவனுக்



கென்றே பிரத்யேகமாக அமைத்தும் வைத்திருந்தான் அலங்கார ரூபத்தில்.

அவசரம் அவசரமாக நாற்காலியின் மீது அமர்ந்து கொண்டு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அவள் எழுதிய மணி மணியான எழுத்துக்களின் வாசகம் அவன் இதயத்தைக் கிளறியது. கடிதத்தை படித்து முடித்ததும் சற்று சாந்தியடைந்து நாற்காலியின் மீதே சாய்ந்து விட்டான். அவன் கண்கள் அப்போது சுவரில் மாட்டியிருக்கும் நிலைக் கண்ணாடியை ஊடுருவப் பார்த்து நின்றது.

என்ன ஆச்சரியம்! வார்த்தெடுத்த வெங்கலச் சிலையாக அலங்கார மோகினியைப் போல் எதிரே வந்து நர்த்தனமாடவாரம்பித்து விட்டாள் அவன் பார்வைக்கு. அவள்

முகத்தில் மந்தகாசம் பெருக்கெடுத்தோடினாலும், ஏதோ துயரத்தில் ஆழ்ந்தவள் போலவே காணப்பட்டாள். இருப்பினும் அவள் கண்களில் கலங்கித் தேங்கும் நீர்த்துளிகள் வெண்முத்தாக சிதறி விழுந்தது அவள் மேலாடையில்.

"எதற்காக இப்படி அழுகிறாய் லலிதா? நான் உன் மீது கொண்டுள்ள பாசத்தை மறந்து விட்டாயா என்ன? உன்வரவுக்காக அன்று முழுதும் பார்த்து பார்த்து அலுத்துப் போய் விட்டது என் கண்கள். என்னை மணந்து கொள்ள இஷ்டமில்லையென்று உன் மன முடிவை மாற்றிக் கொண்டு நின்று விட்டாய்? காவல் தான் அறியுமோ காதலின் கொந்தளிப்பை! அப்படி நான் தகுதி வாய்ந்தவன் இல்லை என்று வேறொருவனை மணப்பதானால் சொல்லிவிடு, மறந்து விடுகிறேன் உன்னை" என்று புலம்பினான்; இல்லை யில்லை; பிரமை கொண்டவன்போலவே பேசினான். ஏன் பேசமாட்டான்? அவன் அவள் உருவை அங்கே காண்கிறானே! மிரண்டு போன அவன் உள்ளம்: உள்ளம் மாத்திரமல்ல கண்களும் அவள் உருவை காண்கின்றனவே.

லலிதாவின் குரல் அவன் காதுகளில் கணீர் என்றொலித்தது. "கணேஷ்! நீ இப்படி கோழையாவாய்' என்று நான் எண்ணியதில்லை. மனிதகுல மாணிக்கமாய் நான் மதிக்கிறேன். கண்ணியம், கட்டுப்பாடு, கடமை யாவும் உன்னிடம் பொதிந்திருக்கிறது என்பதை நான் அறிகிறேன். செல்வத்தில் விளையாடுகிறாய் நீ! அதுவும் எனக்குத் தெரியும். செல்வமாக வாழ்கிறாய்! ஆமாம், நீ உன் பெற்றோர்க்கு செல்வப் புதல்வனாய், படித்தவன் என்ற பெயரை பெற்று விட்டாய்! உன் உயரிய குணத்தைக் கண்டு வியந்தேன். உன் அலங்கார சோபிதத்தைக் கண்டு மனம் பறிபோனேன். பேச்சிலே இனிமை. நடத்தையில் நளினம். இவையெல்லாம் என்னை மயக்கி விட்டன. என்னைப்போல் வேறு பெண்களும் உன் அழகில் மனம் பறி போயிருப்பார்கள். ஆனால் இனிப்பு எங்கே இருக்கிறது என்று துருவி பார்க்கும் ஆற்றல் உன்னிடம் இல்லாததுதான் விந்தை. நீ ஓர் குணசீலன்! இனிப்பதெல்லாம் கற்கண்டு பாகாகி விடாது என்ற உன் முழு நம்பிக்கையைக் கண்டு நான் வரவேற்கிறேன். ஆனால், உண்மையாளனிடம் வீரமிருக்கவேண்டும்

Sree Jayalakshmi & Co.,

MAKERS OF CANE FURNITURE

14, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.

எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பல நிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரி செய்கிறோம்.

வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும்.

ரயில் பிரயாணத்தில் சாமான்கள் சேதம் அடையாமல் இருக்க உத்திரவாதத்துடன் பேகிங் செய்கிறோம்.

உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதவும்.

உரிமையாளர்,

K. N. ராஜன்.

—துணிச்சல் வேண்டும். நீயோ அப்படியில்லை. உன்னிடம் உள்ள மில்லை. உணர்ச்சி எழும் இருதயமில்லை. உண்மையை நாட்டாருக்கு நம்பவைக்கும் தைரியமில்லை. ஏன் காதலித்தாய்? கருத்தை இழந்தாய்? பெண்ணின் இருதயத்தில் குடிபுகுந்தாய்! படித்த அறிவைக்கொண்டு அழகாகப் பேசினயே! திருமணம் வெற்றி முழக்க மிடப் போவதென்று, பன்முறை பறையறைந்தாயே! ஆனல் அவ்வளவும் போலி வேஷம் தானு? எங்கே அந்த சொற்களனைத்தும்? ஓர் பெண்ணின் அன்பை கவர்ந்து விட்டாய், அழகான கடிதத்தில் கொஞ்சும் மொழிகளையும் எழுதி உதிர்த்துவிட்டு, அலுப்பு சலிப்பில்லாமல் கற்சிலைபோல் ஆடாமல் ஆசையாமல் இருக்கிருயே உனக்கு ரோஷமில்லையா! உன்னை நம்பினேன். உனக்காக என் உள்ளத்தை அடிமையாக்கினேன்! கேவலமான பெயரும் எடுத்து விட்டேன். இந்த சுகத்திற்காகவா உன்னை எதிர்பார்த்தேன்? போ! என் முன்னல் நிற்காதே! உன்னைப்பார்த்தால் கூட பாவம் வந்து தொலைந்து விடும்; சண்டாளன் சதி செய்துவிட்டான் என்ற பெயராவது பீறிட்டெழட்டும் வெளியில்" என்று பெருத்த

குரலில் கர்ஜித்தாள் லலிதா. ஆனால் அவள் உருவம் எங்கேயோ நாடி செல்வதைப் போல இருந்தது.

"லலிதா!......லலிதா! ...... ஐயோ லலிதா! ......நில்! போகாதே! உன்னை வஞ்சித்தவன் இந்தப் பாவி யல்ல! என் வார்த்தையை நம்பு! ஆத்திரத்தில் என்னை வசைமாரி பொழிந்து விட்டாய்! இதற்கெல்லாம் நானா குற்றவாளி?... நானா குற்றவாளி?" என்று நாற்காலியை விட்டு எழுந்து தாவினான் கணேஷ்.

'டமால்' என்ற சப்தம்; அடுத்து மின்னல் ஒளிபோன்ற அவன் உள்ளத்தில் ஓர் பிரமை. 'ஹா!' வென்று அலறி விட்டான். இரத்தம் அவன் நெற்றியிலே வடிந்தது. சுவரில் மாட்டியிருந்தக் கண்ணாடி கீழே விழுந்து நொறுங்கிவிட்டிருந்தது. காயம் பட்ட விடத்தை கையினால் அழுத்திப் பிடித்துக் கொண்டே, "சே என்ன முட்டாள் தனம்; லலிதா அன்பான கடிதம் எழுதி விட்டு என் வருகையை எதிர்பார்த்திருப்பாள். அவளா என்னை தூஷிப்பாள்? இல்லை. என் உள்ளத்தின் வீண் மிரட்சிதான இது" என்று உடைந்த கண்ணாடித் தூள்களை பொறுக்கி வெளியில் வீசியெறிந்தான் கணேஷ்.

சாந்தா தன் அண்ணனுக்கு காப்பி எடுத்துக்கொண்டு மாடி ஏறி வந்தாள். கணேசன் கட்டிலின் மீது குப்புற படுத்துக் கிடந்தான். "அண்ணா காப்பி சாப்பிட எழுந்திருங்கள்" என்று கூப்பிட்டாள். கணேசன் எழுந்தான். ஆவலோடு காப்பியை பெற்றுக் குடித்தான். அவன் குடித்துக்கொண்டிருக்கும் போது சாந்தா அவன் நெற்றியில் இருக்கும் கட்டையும் ரத்தக் கசிவையும் பார்த்தாள். "அண்ணா! இதென்ன உங்கள் நெற்றியில், ரத்தம் வடிந்திருக்கிறதே?" என்று கேட்டு அறையை சுற்றி பார்த்தாள். நிலைக் கண்ணாடியின் சட்டம் மாத்திரமிருந்தது. கண்ணாடியைக்காணோம். சில பெரிய துண்டுக் கண்ணாடிகள் கீழே கிடந்தன. சாந்தா அவைகளை எடுத்தாள். "அடடே! கண்ணாடி கூட உடைஞ்சிருக்கே! என்னண்ணா நடந்தது?" என்று கேட்டவாறு கணேசன் நெற்றில் இருக்கும் ரத்தக் கறையை துடைத்து விட்டாள்.

(வளரும்)

ATTENTION TO ALL CINE PRODUCERS & DISTRIBUTORS

★

All kinds of Best quality and Longstanding Film Boxes, Spool Boxes, and Film Rocks are available in ready stock at Moderate rate.

Please call at the following places or Phone to 3619

STAR STEEL TRUNK WORKS

84, Mint Street, Madras-3

No. 305, N. S. C. Bose Road,
China Bazaar, Madras-1

No. 1, Egavalli Amman Koil Compound,
MADRAS-1

For any other requirements of Cine purposes we undertake to supply and orders will be executed promptly.

SOLICITING AN OPPORTUNITY TO-SERVE YOU

வி தி

சீனுவிலே தேயிலை தோட்டங்களில் வேலையாட்கள் வேலையில் அமர்ந்து வாழ்க்கையை நடத்துவதுபோல, குளூர் கிராமத்தில் வெற்றிலை தோட்டத்தில் வேலைக்கு அமர்ந்து ஊதியம் பெறுபவர் கணக்கற்றவர். அதுவும் வெள்ளைச்சாமி கவுண்டர் தோட்டத்து வெற்றிலை என்றால் எந்த, வீட்டுக்கல்யாணத்திலும் பார்க்கலாம், எங்கு விழா நடந்தாலும் இந்த வெற்றிலையே வாங்குவார்கள்.

வெள்ளைச்சாமியின் தோட்டத்திலே வேலைக்கு அமர்ந்தவர்களுள் முனியம்மாவும் ஒருவள்.

*　*　*

"என்னே புள்ளே! தோட்டத்துக்கு போக நேரமாவுல்லே. இங்கேயே குந்திக்கிட்டு இருந்தா பானைல்லே சோறு வந்து விளுமா" என்றான் கந்தசாமி.

முனியம்மாவையும் வேலையிலமர்த்தி அவள் சம்பாதித்

ஒய். வி. விஸ்வேஸ்வரன் எம். ஏ.

ததை வைத்துதான் காலந்தள்ளவேண்டும் கந்தசாமி. வறுமை அவர்களை வாட்டியது. முனியம்மாவின் தாய்இறந்து இருபது வருடங்களாகிவிட்டது. கந்தசாமியும் கஷ்டப்பட்டு வேலை செய்து சம்பாதித்த காலம் கடந்தது. அவனுடைய வயது அவனை வீட்டிலேயே அடைத்து வைத்தது. வயது அறுபதை

கடிகாரத்தின் மேல் கூடு போன்றது மனித உடல். உள்ளேயிருக்கும் இயந்திரம் போன்றது இதயம். இதயம் உடைந்தால் உடல் வெறுங் கூடே யென்ற தத்துவத்தை அடிப்படையாய்க் கொண்டு இக்கதையைப் புனைந்திருக்கிறார் ஸ்ரீ விஸ்வேஸ்வரன். ஆ—ர்.

தாண்டியது, கைகால்கள் சோர்வடைந்தன. நரம்பு தளர்ச்சியே காரணமென்று நாட்டு வைத்தியர்கள் கூறினர். இவ்வாறு அவன் படுத்த படுக்கையிலிருந்தே பெண் முனியம்மாவை உற்சாக மூட்டி தாயின் பாகத்தை தானே ஏற்று அன்புடன் அவளை தினமும் வெற்றிலை தோட்டத்திலே வேலைக்கு அனுப்புவான்.

'இதோ போரேனுங்க, இன்னிக்கு கிணத்துலே தண்ணி சேந்துட்டு வர நேரமாப் போச்சு! இதோ கஞ்சி உங்களுக்கு ஊத்தி வைச்சிட்டு பின்னாலே போறேன்' என்றாள் முனியம்மாள்.

"முனியம்மா இங்கே வா" என்றழைத்தான் கந்தசாமி. கண்கள்ல் நீர் பெருகி புரண்டோடியது. பழைய நினைவுகள் அவனைச் சூழ்ந்தன. தன் பெண்ணிற்கும் ஒரு மருகனைத் தேடிப்பிடிக்கும்பொறுப்பு தன்மேல் இருப்பதை உணர்ந்தான். "இதோ பார் முனியம்மா, அடுத்த வூட்லே இருக்கானே பழனிச்சாமி, பட்டணத்திலே படிச்சு வந்திருக்கான். நல்லப் பையன். அவனை உனக்கு கல்யாணம் செஞ்சு வைக்கறதா தீர்மானிச்சுட்டேன். உனக்கு சம்மதம் தானே' என்று முனியம்மாவைக் கேட்டான். "அதுக்கென்னங்க நீங்க சொல்றதை நான் தடுத்துப் பேசுவேனா?" என்றாள் அவள்.

பக்கத்து வீட்டு பழனிசாமி சேனுபதியின் மகன். சேனுபதியும், கந்தசாமியும் கண்ட்ராக்ட் வேலையை கூட்டாக நடத்தியவர்கள். ஊரிலேயார் வீடு கட்டினாலும் இவர்களைத் தான் யாரும் 'கண்ட்ராக்ட்' எடுத்து கொள்ள கூப்பிடுவார்கள். சேனுபதியிடம் ஒரு வார்த்தை சொன்னால் முனியம்மா பழனிசாமி திருமணம் நடந்தேறி விடும்' என்ற தைரியம் மட்டும் கந்தசாமிக்கு இருந்து வந்தது.

சேனுபதியும் அன்று யதேச்சையாக கந்தசாமியை பார்க்க வந்தவன் முனியம்மாவைக் கண்டு விட்டான். முனியம்மாவின் முகவெட்டு அவனை ஒரேயடியாக மாற்றி விட்டது. அவன் நினைத்ததெல்லாம் முற்றிலும் தவறு என்பதை உணர்ந்தான். கந்தசாமி மகள் தானே. வறுமையின் வடிவத்தில் என்ன எழில் இருக்கப்போகிறது என்று எண்ணியவன். முனியம்மாவை ஒரு முறை கண்டதும் 'பழனி, உனக்கு பக்கத்திலேயே பொண்ணு

இருக்கடா. நான் இன்னும் ஊரெல்லாம் தேடவேண்டாம்' என்று பலக்க சொல்லிவிட்டான் கந்தசாமியின் வீட்டில் அப்பொழுது இருப்பதை முற்றிலும் மறந்து. இதைக் கேட்டவுடன் கந்தசாமியின் மகிழ்ச்சி எல்லைக் கடந்தது. முனியம்மாவை அழைத்தான். 'முனியம்மா! மாமாவுக்கு விழுந்து கும்புடு' என்றான்.

அந்த வருஷம் தைமாதத்தில் குளூர்கிராமத்தில் முனியம்மாவுக்கும் பழனிசாமிக்கும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. முனியம்மா வெற்றிலை தோட்டத்திலே வேலைக்குச் செல்வாள். பழனிசாமி பக்கத்து டவுனில் பஞ்சாலைக்கு சென்று வந்தான். இருவரும் கந்தசாமியை நன்றாக கவனித்து வந்தனர்.

நாட்கள் கடந்தன. ஓர் நாள், தோட்டத்துக்குபோன முனியம்மா தோட்டத்திலேயே கலைப்படைந்து மயக்கமாக விழுந்து விட்டாள். மற்ற தொழிலாளிகளும் உடனே அவளுக்கு முதலுதவிக்கு விரைந்தனர். நாட்டு வைத்தியரை அழைத்து வந்தாள் நாகம்மா என்ற அவளோடு வேலை செய்யும்

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor.

(Regd. No. 5.)

A·C,C. CEMENTSTOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

மற்றொருத்தி. முனியம்மா மூர்ச்சையாய் தோட்டத்தில் விழுந்தசெய்தி கிராமம் முழுவதும் பரவியது. முனியம்மா விற்கு உடம்பு ஒன்றும் இல்லை. உங்களுக்கு பேரன் பிறக்கப்போகிறான் என்றார் நாட்டு வைத்தியர் நாச்சிமுத்து. கந்தசாமி கவலையை விரட்டினான். பேரன்பிறக்கப் போகும் நாளை எதிர்பார்த்தான். மில்லிலிருந்து வேலை முடிந்தபிறகு மாலையில் வீடு திரும்பினான் பழனிசாமி. முனியம்மா வெட்கத்தால் தலை குனிந்தாள். பழனிசாமியின் மகிழ்ச்சி துள்ளிக்குதித்தது. கந்தசாமி உள்ளம் குளிர்ந்தது. முனியம்மாவும் ஒரு செல்வத்தை பெற்றாள். தான் பெற்ற செல்வத்திற்கு வேலன் என்று பெயரிட்டாள். இப்பொழுது முனியம்மாவும் தோட்டத்து வேலைக்கு புறப்பட தயாராகி விட்டாள். குழந்தை வேலனையும் கூட அழைத்து செல்வாள். தோட்டத்தில் வேலையில் அவள் கவனம் செலுத்துவாள். வேலனையும் ஒருபுறமாக துணியை விரித்து தவழ விட்டுவிடுவாள். அன்



புது டில்லியில் புதியதாய் கட்டப்பட்டுள்ள அமெரிக்க ஸ்தானிகராலயம்

2/21, Pilliar Koil Street,
MADRAS-3

ஒருநாள். குழந்தை வீறிட்டு அழுத சத்தம்கேட்கவே திடுக்கிட்டாள் முனியம்மா. வேலனை நோக்கி ஓடினாள். வெற்றிலை கொடிகள் இங்கும் அங்குமாக சுற்றி வளைந்தன. அவற்றை தள்ளி அவள் செல்வத்தை விட்ட இடத்திற்கு விரைந்தாள். ஆனால்! அவள் செல்வத்தை உயிரோடு காணவில்லை. மயக்கமாக புரண்டு படுத்திருந்தான் அந்த குழந்தை. பச்சிலை மருந்து மூலிகைகளைக் கொண்டு பாம்பின் நஞ்சை அந்த குழந்தையின் உடம்பிலிருந்து எடுக்க சிகிச்சை யளித்தனர். மந்திரவாதிக்கு சொல்லி யனுப்பினர். மந்திரமும், தந்திரமும் பலிக்கவில்லை. குழந்தையின் அருகே அழகாக படுத்திருந்த அந்த பச்சைப்பாம்பு அவள் உள்ளத்தின் வேதனையை அறியவில்லை. செய்தி கேட்டதும் கந்தசாமியின் இருதயத்துடிப்பு நின்று விட்டது. தன் மகனை பறிகொடுத்தது போதாதென தகப்பனையும் பறி கொடுக்க நேர்ந்தது முனியம்மாவுக்கு.

பழனிசாமி தேற்றினான் முனியம்மாவை. பாம்பிற்கு பலி கொடுத்தது, தாய் உள்ளத்தை உறுத்திகொண்டே இருந்தது. முனியம்மாவுக்கு, பயித்தியம் பிடித்ததுபோல் ஆயிற்று. தோட்டத்தில் வேலைக்கு செல்வதிலிருந்து நிறுத்தினான் பழனிசாமி. ஆனால் முனியம்மாவிற்கு என்றும் 'பச்சைக்கொடி'யின் நினைவுதான். பச்சைக் கொடிகள் அவள் வாழ்க்கையை வளர்த்தது மட்டுமின்றி அவள் வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கே உலைவைத்து விட்டு அவள் அருமை மகனை அவளிடமிருந்து பிரித்தது. அன்றையிலிருந்து

பச்சைக்கொடியை பார்த்த பொழுதெல்லாம் அவள் மகன் நினைவு அவளுக்கு வந்து விடும். எங்கு பச்சைப் பாம்பு இருக்குமோ என்று அஞ்சுவாள். 'வேலா' என்று கதறுவாள். அவள் நிலையைக் கண்டு அந்த கிராமத்தை விட்டே புறப்பட எண்ணினான் பழனிசாமி.

தன் வேலையில் உயர்வு கிடைத்தது. ஊதியும் அதிகம் கிடைக்கவே டவுனிலேயே வீடுபார்க்க புறப்பட்டான் மனைவியுடன். மூட்டைமுடிச்சுகளை கட்டி ஸ்டேஷனுக்கு சென்றனர் கணவனும் மனைவியும். ரயிலில் ஏறுமுன் "முனியம்மா பார்த்தாயா! பச்சைக்கொடி காண்பிக்க போறார் கார்டு. ரயில் புறப்படும் நேரம்" என்றான் பழனிச்சாமி.

"ஐயோ!" என்றலறினாள் முனியம்மா. அடுத்தநிமிஷம் ரயிலடியில் கிடந்தாள்! ரயில் புறப்பட்டு விட்டது. பழனிசாமிக்கு முனியம்மாவின் கடைசி வார்த்தைகள் எதிரொலித்தன. "வேலா நானும் வந்திடுகிறேன்" அவன் குறிப்பிட்ட தாவரத்தின் பெயரும் பச்சைக் கொடி. கார்டு காட்டும் துணியாலானதும் பச்சைக் கொடி. பொதுவாக பச்சைக் கொடியென்ற சொல்லே அவளுக்குப் பரம வைரியாய்—முடிவில் எமனாகவே அமைந்தது. பச்சைக் கொடியில் வாழ்ந்த அவள் பச்சைக் கொடிக்கே பலியானதை எண்ணி பழனிசாமி துக்கிக்காத நாளே கிடையாது.

அழிவுப் பொருள்

தமக்குத் தெரிந்த 8 அவுன்ஸ் பொருள் ஒன்று இருப்பதாகவும், அது உலகிலுள்ள பிராணிகள் உள்ளிட்ட சகல ஜீவராசிகளையும் அழித்து விடக்கூடிய சக்தி வாய்ந்தது என்பதாகவும் மாண்ட்ரீலில் கூடிய விஞ்ஞானிகள் கூட்டமொன்றில் பேசியபோது சர் ராபர்ட் வாட்ஸன் வாட் தெரிவித்தார். அவர்தான் ராடார் கருவியைக் கண்டு பிடித்தவர்.

காந்தீய நூலுக்குத்தடை

சாத்வீக சட்ட மறுப்பு என்ற நூலுக்கு தென்னாப்பிரிக்கா சர்க்கார் தடை விதித்திருக்கிறது. காந்திஜீயின் சாத்வீக சட்டமறுப்பு தத்துவங்கள் அடங்கிய நூல் அது.

தொழிலின் தோழன்!

—:" ஆசியாராய் ":—

1 நதியுலாம் மண்ணில் மாலை நயந்துலர்ம் அதனை மாய்த்து
மதியுலாம் [1]அல்நா டிடவும் மாழ்கவேத் துயிலில் மாந்தர்ப்
புதிருலாம் வாழ்வு மாங்கேப் புதைந்துள தேயென்
றெண்ணிக்
கதிருலாப் பாட லாலேக் கிழக்குநீ வெளுக்கற் செய்வாய்.

2 எழுந்திடும் மக்கள் கூட்டம் இணைந்திட வாழ்வில்
எண்ணம்
ஒழிந்திடப் பசியாங் கமிழ்தை உண்டிடும் அடுத்த வேளைக்
கழிந்திடப் பசியில் லாதுக் கடுமையா யுழைக்கு மாங்கேத்
தொழில்மகிழ்ந் திடுவா ளன்றோர்த் தொண்டினில்
நடனம் செய்வாள்.

3 உலகினை யெழுப்பிக் காலை உன்னதத் தொழில் மங்கைக்கு
நலமுறு மக்கள் மூலம் [2]நரைபெருக் கிடுத லாலேக்
குலவிடுந் தொழிலின் தோழன் கூறுவன் நீயென் றேநான்
கலவியிற் பேடை வீழ்த்திக் களித்திடுஞ் சேவ லேமெய்.

4 இன்னும்எங் தமிழன் போன்று ஏறிநீப் போரின் மீது
விண்ணினை நோக்கிக் கூவி வியனுல கதிரச் செய்த்
தண்கடற் கதிரோன் வீழுந் தவழ்ந்திடும் இருள்பின்
ஒய்விற்
கண்டுவாய்க் குடிசை யைநீக் கொண்டுள மாண்பு கேளாய்.

5 கொண்டுளாய் அந்தி வான்போற் கொண்டையைத்
தோகை தன்னைக்
கொண்டுளாய் வான்வில் போன்றுக் கூறெருணுக் கம்பீ
ரத்தைக்
கொண்டுளாய் நடையில் வீறைக் கொண்டுளாய்க் குரலிற்
கூர்மைக்
கொண்டுளாய் நகத்தி லின்பம் கொண்டுளாய் வாழ்வி
லெங்கும்.

---

[1] அல் - இரவு. [2] நரை - பெருமை.

மணிப்பூர் பிரதேசத்தில் மண்பாண்ட தொழில் நடத்தும் குடும்பம்.

வட்டியும், முதலும்

[— அமலன்]—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"மன்னிக்கவேண்டும். அப்படியொன்றும் வித்தியாசமாக நினைக்கக் கூடாது. ஏதோ உதவி செய்தீர்களே! விலாசம் தெரிந்தால் உங்கள் பணத்தை திருப்பி அனுப்பிவிடலாமென்று...!" மன மறிந்து பொய் சொல்லி நிலைமையை சமாளித்தேன்.

"ஓகோ! அப்படி யொன்றும் செய்து விடாதீர்கள். எப்போவாவது சந்திக்க நேர்ந்தால் "வட்டியும் முதலும்" சேர்த்துக்கொடுங்கள், வாங்கிக்கொள்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே பக்கத்தில் நின்ற மெருகு குலையாத மோரிஸ் காரில் ஏறி உட்கார்ந்தாள். டிரைவர் சாவதானமாக காரை ஓட்டிக்கொண்டே, புரசைவாக்கம் போகும் பாதையை நோக்கிப் பறந்தான். கார்போகும்போது அவள் திரும்பிப்பார்த்த பார்வை, இழையவிட்ட முறுவல், அதன் அர்த்தம்? ஆம்! அவளது அரும்பும் புன்னகை ஆளை மயக்கா விட்டாலும் ஆசையைத் தூண்டிவிட்டதே! மந்திரத்தால் கட்டப்பட்டவன்போல் கார்மறையும் வரை ஆடாமல் அசையாமல் நின்றேன்.

"பூம்...பூம்...பூம்"

"புரைசைவாக்கம் போகும் பஸ் குரல்கொடுத்து என்னைக் கூப்பிட்டது.

சந்தர்ப்பத்தை நழுவவிட மனமில்லை. எனக்கு அந்த வேடிக்கையான எண்ணம் ஏனோ தோன்றியது? தேனும் பேட்டை போவதை தற்காலிகமாக நிறுத்திவிட்டு குணசுந்தரி வீட்டைத் தேடிப்போனேன்.

முருகப்ப முதலித் தெருவிலுள்ள 3 நெ. வீட்டைப் பார்த்த பின்புதான் என் நெஞ்சத்துடிப்பு நின்றது.

P. ஹுசேன்ஷா & சன்ஸ்
P. H. முகமது நஸீருத்தீன்
டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்.
G I பைப் & பைப்
பிட்டிங்ஸ் வியாபாரம்,
இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்.
பாலக்கரை ரோடு திருச்சி-8.
தபால் பெட்டி நெ. 456
போன் : 786
தந்தி : HARDWARE

வீடு புது மோஸ்தரில்கட்டப் பட்டு கம்பீரத் தோற்றத் துடன் காட்சியளித்தது. அவள் ஏறிவந்தக் காரும் வாசலில் நின்றது. ஆனால் உள்ளே நுழைய எனக் கென்ன உரிமை (?) என்று நினைக்கும்போது என் மாமா அங்குக்கடவுள் போல் தோன்றி கரமசைத்து வர வேற்றார்.

இவர் இங்குவரக்காரணம்?

புதிர் நிறைந்த உள்ளத் தோடு உள்ளே போனேன். "வாருங்கள் மாப்பிள்ளை! நான் உங்களை அழைப்பதற் காகத்தான் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டேன்; அதற்குள் இங்கு இருக்கும் என் தம் பிக்கு இருதய நோய் என்று "போன்" செய்தார்கள்— டாக்டர் உத்தியோகம்தான் தெரியுமே! தர்மசங்கடமான நிலையில் இங்கு வந்து விட் டேன்".

"உங்கள் தம்பியா?—" உற்சாகத்துடன் கேட்டேன். ஏனெனில் மாமாவின் தம்பி மகள் குணசுந்தரி எனக்கு இப்போது முறைப்பெண் ணல்லவா?

"ஆமாம்! என் தம்பி எங் களுக்கு முன்பே கோலாலம் பூருக்குப் போனவன் எங்க ளுடன் தான் திரும்பி வந் தான்; அதனால் தான் உங்க ளுக்குத் தெரியவில்லை" என்று சொல்லிக்கொண்டே அங்குள்ள தன் தம்பியின் குடும்பத்தினரை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர் கள் எல்லோரும் இந்தப் புதிய மாப்பிள்ளையை அக மும், முகமும் மலர உபசரித் தனர். குணசுந்தரிக்கு நான் அத்தான் முறை என்று தெரிந்ததும், ஊரில் இல் லாத வெட்கம் வந்து புகுந் துக்கொண்டது. ஓட்டலில் கூச்சமில்லாது பேசியவள், ஒடி, ஓடி, ஒளிந்துகொள் வானேன்? அவள் எனக்காக

தயாரித்து வந்த பழரசம், தேனுக இனித்தது, இதயத்தில் அமுதையே பொழிந்தது.

வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் எதிர்பாராதவாறு நடக்கின்றன. பல நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் சிலருக்கு வெற்றி கிடைக்கத்தான் செய்கிறது. எட்டாப்பழமென நினைத்து வந்த குணசுந்தரி இப்போது கிட்டத்து உறவு. அதிலும் முறைப் பெண். இதைவிட வெற்றி எனக்கு வேறு ஏது? ஆனுல் அந்த வெற்றிப் பாதையில் விபத்துக்குள்ளாகாமல் நடக்கவேண்டுமே?

கடைசியில் முடிவற்ற நினைவுப்பாதையில் மாமாவுடன் தேனும்பேட்டைக்குச் சென்றேன். அங்கு அக்கா என்னை அன்புடன் வரவேற்ருள்.

அக்கா ஒரு ஹாஸ்யப் பேர்வழி. வந்ததும் வராததுமாய்.........!

''வாடாப்பா, வா!! இப்போதாவது வழி தெரிந்ததா? ''நாங்கள் இங்கு வந்து ஒரு மாதமாகிறதே! ஒரு முறை வந்து போனுல் என்ன? வயதுக்கு வந்தப் பெண் வீட்டில் இருப்பது என்னவோ, வாஸ்தவம் தான். நீஎன்ன பிறத்தியாரு?''

அக்கா, இன்று மட்டுமல்ல என்றும் அப்படித்தான் என்னுடன் வேடிக்கையாகப் பேசுவாள்.

''ரயில் வேலையில் நாம் நினைத்த போது லீவு கிடைக்கிறதா?'' அப்பாவும் அம்மாவும் தான் வந்து பார்த்தார்களே! போதாதா! என்றுசமாதானம் சொல்லிக்கொண்டே சோபாவில் உட்கார்ந்தேன்.

''கனகா! உன் அத்தான் வந்திருக்கிருன். இப்படி சங்கோஜப்பட்டால் நாளைக்குக் கல்யாணமானவுடன், அவனுடன் கடற்கரை, சினிமா, நந்தவனம் இவைகளுக் கெல்லாம் எப்படி கூச்சமில்லாது போவாய்?''

அக்கா உள்ளே போனுள், மாமாவும் பின் தொடர்ந்தார். மணப்பெண் கனகா மட்டும் லேசில் வெளியே வரவில்லை.

இந்தக் கட்டத்தில் நான், என் கற்பனைகளையும், கண்களையும் கூர்மையாக்கிக் கொண்டிருந்தேன். நான் கதை எழுதுகிறவன். என் கற்பனையில் எத்தனையோ பெண்களின் அழ்கை வரு



ணித்திருக்கிறேன். கனகாவின் அழகு அதற்கு ஒத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டாமா?

கடைசியில் கனகா காப்பி பலகாரத்துடன் அன்னநடை நடந்து வந்தாள். அவள் முகத்தில் நாணம் கலந்த முறுவல் அரும்பியது.

நான் பார்த்தேன். கற்பனைக் கண்களோடுதான் பார்த்தேன். கனகா பருவத்தில் இளமையாகவும், பார்ப்பதற்கு அழகாகவும் தான் இருக்கிறாள். ஆனால் குணசுந்தரியின் செந்தாமரை முகத்திற்கும், செம்பொன் நிறத்திற்கும் கனகா எள்ளவும் ஈடாக மாட்டாள். என் நெஞ்சில் குணசுந்தரி குடி கொண்டு விட்டாளே! இனி கனகாவிற்கு அதில் இடம் ஏது?

ஊருக்குத் திரும்பி வந்ததும் தந்தையிடம் என் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

“பைத்தியம்! கனகா நம்மப் பெண். அத்துடன் சொத்து, சுகம், இத்தனையும் கிடைக்கும். இதை விட்டு அவளது சித்தப்பா மகள் சுந்தரியைக் கேட்டால், மூத்தப்பெண் கனகா இருக்கும்போது குணசுந்தரியைக் கொடுப்பார்களா?” என்றார். என் தந்தை சொன்னது எனக்கு நியாயமாகப் பட்டதால், நான் எதிர்த்துப் பேசவில்லை. என் விருப்பம், ஆசை, எல்லாவற்றையும் மறுமுறை “வாழைப்பழத்தில் ஊசி” ஏற்றுவதுபோல் சொல்லிவிட்டு அப்பாவின் ஆணைக்காககாத்திருந்தேன். என் மீது உயிரையே வைத்திருக்கும் அவர் யோசித்தார்.

“உம்! உன் ஆசையைத் தான் கெடுப்பானேன்! விஷயத்தைச் சொல்லி கேட்டுப்பார்க்கிறேன்” என்றார். இதற்குமேல் அவர் தான் என்ன செய்ய முடியும்? மறு

நாளே சென்னைக்குப் புறப்பட்டவர் இரண்டு நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்தார்.

நான் உற்சாகத்துடன் அப்பாவை வரவேற்றேன். என்னைப்பார்த்து சிரித்தார். ஒரு வேளை ஒட்டலில் நடந்த விஷயம் வெளியாகிவிட்டதோ! அப்பாவின் சிரிப்புக்குக் காரணம்?

"என்னப்பா! போன காரியம், காயா? பழமா?"

காயுமில்லை, பழமுமில்லை. உன் விருப்பத்தைச் சொன்னேன். அவர்கள் சொன்ன கதையும் கேட்டேன். கனகாவைக்கல்யாணம் செய்வது தான் நல்லது. கல்யாணம் முடிந்தவுடன் நீ கதை எழுத வேண்டாமா? என்று சிரித்துக்கொண்டே பெட்டியைத் திறந்து கட்டுக் கட்டாக இருந்த கல்யாணப்பத்திரிகைகளை எடுத்து மேஜையில் வைத்தார். பத்திரிகையை பரபரப்புடன் பிரித்துப் பார்த்தேன். கடைசியில் என்கதை கனகாவின் கல்யாணத்தில் தான் வந்து நின்றது.

நான் காணப்போனது கனகாவை, கண்டு காதல் கொண்டது குணசுந்தரியை. கடைசியில் கைப்பிடிக்கப் போவதோ, கனகாவை. என்ன ஏமாற்றம்?

காலத்தின் வேகத்தில் கல்யாண காரியங்கள் எல்லாம் முன்னேறின. ஒரு நல்ல நாளில் கெட்டி மேளம் கொட்டப்பட்டது. தாங்க முடியாத மனப்பாரத்துடன், தாலியைக் கையில் எடுத்து கனகாவின் கழுத்தில்கட்டப் போனேன். தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தவள் லேசாக நிமிர்ந்தாள். என் கருவிழி வண்டுகள் கனகாவின் மலர் முகத்தில் மொய்த்தன. அவ்வளவுதான். நான் பிரமித்துப் போனேன் அந்தப் பிரமாண்டமான சிங்காரப் பந்தல் செயற்கைச் சந்திரனைப் போல் சுற்றியது. நான் காண்பது கனவா? கற்பனையா?

இல்லை! இல்லை!! உண்மை! குணசுந்தரிதான் மணப்பெண். இதில் சந்தேகமே இல்லை. தலைகால் புரியாத மகிழ்ச்சியினுல் தாலியை இறுகக்கட்டினேன். உணர்வற்று இருந்த மனம் உயிர் பெற்றது. அனலாக-அக்னி குண்டத்தில் வீசிய புகைக் காற்றுகூடதென்றலாகமாறியது; தேன்மாரிப் பொழிந்

தது. இதென்ன எதிர்பாராத நிகழ்ச்சி?

என் மனத்தை அறிந்த மணப்பெண் கனகா. கடைசி நிமிடத்தில் தன் வாழ்வை தங்கை சுந்தரிக்குத் தியாகம் செய்து விட்டாளா? அல்லது மனமுடைந்து கடிதம் எழுதி வைத்து விட்டு ஓடி விட்டாளா? ஒன்றுமே விளங்க வில்லையே! நீர்க் குமுழிகள் போல் எழுந்த கேள்விகள் நெஞ்சினுள்ளேயே வெடித்து விட்டன.

மணப் பெண்ணுக என் அருகில் வீற்றிருந்த குண சுந்தரியைப் பார்த்துக் "கனகா எங்கே?" என்றேன்.

அவள் யாருக்கும் தெரியாமல் ஒரு கடிதத்தை என் கையில் திணித்தாள். மடியில் மறைத்துக் கொண்டேன். கடிதத்தைப் படிக்கத் துடியாய்த் துடித்தேன். கல்யாணசந்தடியில் இதெல்லாம் சாத்தியமாகிற காரியமா? கடிதம் மறைந்தே இருந்தது. ஆனால் என் கற்பனையோ பலவாறுசிதைந்தது.

எல்லாம் ஒருவாறு முடிந்ததும் நான் மாடிக்கு வந்து குணசுந்தரி கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். என்ன ஆச்சரியம். கனகாதான் எழுதி யிருக்கிறாள். என்ன துணிச்சல் இவளுக்கு? அப்பா சிரித்துச் சிரித்துச் சொன்னதின் அர்த்தம் இப்போதுதான் புரிந்தது. எல்லோரும் சேர்ந்தல்லவா என் கற்பனைத்திறனைச் சோதித்திருக்கிறார்கள்? என் கதைகளில் எத்தனையோகதாநாயகர்களை சிக்கலில்விட்டுத் திணறஅடித்ததின் பலன் என் வாழ்க்கைக் கதையில் நானே ஏமாந்து போனேனே! இந்தக் கதையை நீங்கள் வேறு கேட்க வேண்டுமா? பிடியிலிருந்து நழுவிய கனகாவின் கடிதம், பெருமூச்சின் அசைவிலே தவழ்ந்துமிதந்தது.

அதே சமயம் கல, கல வெனும் வளையல் குலுங்கும் ஒலி கேட்டது; மல்லிகை மணம் காற்றில் மிதந்து வந்தது. மணப்பெண் வந்தாள். வந்ததும் வராததுமாய் என் மடியில் கிடந்த அந்தக் கடிதத்தை எடுத்து உரக்கப்படிக்க ஆரம்பித்து விட்டாளே!

ஊர் வாயை மூடினாலும் இவள் வாயை மூடமுடியுமா? எல்லாவற்றையும் விட

உங்கள் ஆவலைத்தான்
நான் தடுப்பானேன்! அவள்

வாயிலாக நீங்களே தெரிந்து
கொள்ளுங்கள்.



டில்லியில் நடந்த இந்திய விஞ்ஞான காங்கிரஸில் கலந்து
கொள்ள ஊர்வலமாய்ச் செல்லும் பண்டித நேரும்,
எலிஜபெத் ராணியின் கணவர் எடின்பரோ கோமகனும்.

அன்புள்ள அத்தானுக்கு,

வணக்கம்.

குணசுந்தரியாக இது வரை நடித்து வந்த நான் தான் கனகா என்ற விஷயத்தை விளக்கும் இக்கடிதத்தை, நீங்கள் எவ்வளவு ஆச்சரியத்துடனும், ஆனந்தத்துடனும் படிப்பீர்கள் என்பதை எப்படி வர்ணிப்பது?

அன்று எதிர்பாராத விதமாக உங்களை ஓட்டலில் நான் சந்தித்தேன். அப்போது உங்கள் தோல்பையில் ஒட்டப்பட்டிருந்த முழுவிலாசத்தின் மூலம் உங்களை அடையாளம் கண்டுகொண்டேன். ஆனால் அந்த நெருக்கடியான, சம்பவமும், அதையொட்டி நாமிருவரும் நேசிப்பழகும் சந்தர்ப்பமும் இல்லையென்றால், ஒன்றுமே இல்லை. அதிலும் ஒரு கன்னிப் பெண், அன்னியருடன் அப்படிப் பேசிப்பழக பயித்தியமா என்ன?

அந்த நிலையில் நான் என் சொந்தப்பெயரைக் கூட சொல்ல வெட்கப்பட்டேன். காரணம். நீங்களோ, என்னைப் பார்க்க வந்த மாப்பிள்ளை. இவ்வளவும் நடந்த பின் நான்தான் கனகா என்று காட்டிக்கொண்டால், நம் இருவர் நிலையும் தர்மசங்கடமாக இருக்காதா? நான் யோசித்தேன். சந்தர்ப்பச் சிக்கலிலிருந்து சாமர்த்தியமாகநழுவிவிட நினைத்தேன். என் தங்கை குணசுந்தரியின் விலாசத்தைச் சொன்னேன். போனது போகட்டும், கல்யாணமாகும் வரை கனகா குணசுந்தரியாக நடிக்க அவசியம் என்ன என்று கேட்கிறீர்களா? அதற்குக் காரணம் நான்தான்.

சில நிமிட உரையாடலில் உங்கள் உள்ளத்தைப் புரிந்து கொண்டேன். அதாவது சந்தர்ப்ப வசத்தால் குணசுந்தரியாக மாறி நிற்கும் என்னை உண்மையிலேயே குணசுந்தரி என்று நினைத்து உங்கள் உள்ளத்தைப்பறி கொடுத்துவிட்டீர்கள். நீங்கள் மட்டுமென்ன; ஆண்களே அழகுக்கு அடிப்பட்டவர்கள் தானே!

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு சொந்த மாமனை வேடிக்கையான சம்பவத்தில் சிக்க வைத்து, கதை எழுதும் கற்பனையை சோதிக்க நினைத்தேன். வெளி நாட்டுப் பழக்க வழக்கங்களில் ஊறிய நான்

இதை விகல்பமாக நினைக்க வில்லை. மேலும் சிறுமியாக இருந்தபோது என்னை எவ்வளவுதாம் ஏமாற்றி அழவைத்திருக்கிறீர்கள்? நானும் பதிலுக்கு உங்களை ஏமாற்றியிருக்கிறேன்.

புரசைவாக்கம் போனதும். ஹோட்டலில் நடந்ததை அப்பாவிடம் சொல்லி என் விருப்பத்தையும் தெரிவித்தேன். அதற்கு அவர்... "குறும்புக்காரப் பெண்ணம்மா நீ! சிறு வயதில் உன் மாமனை ஏமாற்றி ஓட்டியடித்தது போதாதா? ஊம்! மாப்பிள்ளை உன் அழகில் மயங்கி உன்னை குணசுந்தரி என்று நினைத்து இங்கே தேடிவந்தால் உன்னைக் குணசுந்தரி என்றும், உண்மைக் குணசுந்தரியான உன் தங்கையைக் கனகா என்றும் அறிமுகப்படுத்து. அவர் மனத்தை அறியலாம்." ஆனால் இந்தக் கபடநாடகம் கல்யாணம் முடியும்வரை ரகஸியமாகவே இருக்கவேண்டும்."—என்று சிரித்தார்.

உடனே அங்கிருந்த என் தங்கை குணசுந்தரி கனகாவாக நடிக்க தேனாம்பேட்டைக்கு அனுப்பப்பட்டாள். உண்மைக் கனகாவான நான். புரசைவாக்கத்தில் தங்கி குணசுந்தரியாக நடித்தேன்.

உங்கள் அப்பா வந்தார். உங்கள் விருப்பத்தைச் சொன்னார். எங்கள் கதையைக் கேட்டதும் இடி இடியென சிரித்தார்.

'சரி, சரி, அப்படியே செய்வோம். கதை கதையென்று எதை எதையோ கற்பனை செய்து கொண்டு எழுதுபவனுக்கு இது ஒரு வேடிக்கையான சம்பவந்தான்" என்றார்.எதிர்பார்த்தவாறு எல்லாமே இன்று மங்களகரமான முடிவைதேடி கொடுத்து விட்டதல்லவா?

குணசுந்தரியாக இதுவரை நடித்த உங்கள் அன்பார்ந்த
மனைவி, கனகா.

கடிதத்தைப் படித்துமுடித்தாள். அவளது ரத்தம் போன்ற அதரங்களில் தித்திக்கும் புன்னகை மலர்ந்தது.

"அக்கா மகளா! கொக்கா!!" என்று அவளது பூக்கரங்களைப்பற்றிவட்டியும் முதலும் சேர்த்துக்கொடுத்தேன். அது நோட்டா, நாணயமா என்பதைக் கனகாவைக் கேட்டால்தான் தெரியும்?

★ அதிசயச் சம்பவங்கள் ★

பெற்ற மகனை பிதா அடிக்கலாமா?

மகன் விஷமஞ் செய்ததற்காக தகப்பன் கடுமையாக திட்டி அடித்தாராம். இது தாய்க்கு பொறுக்கவில்லை. உடனே சீறி எழுந்தாள் கணவன் மீது. "நீங்கள் அடிக்கவா நான் பிள்ளை பெற்று வைத்திருக்கிறேன்!" என மனம் நொந்து கோவென்று அழுதாளாம். அதன்பின் தன் கணவன்மீது கோபப்பட்டு விஷமுண்டு மாண்டுபோனாளாம் பெருமங்கலம் கிராமத்தில் சோக்சாயி என்னும் 38 வயதுள்ள மங்கை.

கம்பத்தின் மீது காரிகை தவம்

17, வயதுள்ள மாரு யிரோஸ் என்ற இளங்குமரி ஒரு கம்பத்தின் மீது தொடர்ந்தார் போல் 164 நாள் தங்கியிருக்கிருள். அந்தக் கம்பத்தின் உயரம் 71-அடி, கம்பத்தின் மேலுள்ள மரப்பெட்டிக்குள் தங்கியிருந்து உலக சாதனை யடைகிருள். அவள் 12—2—59 கம்பத்திலிருந்து கீழே இறங்கினுள்.

இப்படியும் நடந்திருக்கிறதே?

உண்டியலை உடைத்து பணத்தை அள்ளிப்போக வந்தத் திருடன் அங்கேயே மூர்ச்சித்துக் கிடந்தான். காலையில் கோவில் கதவைத் திறந்து உள்ளே வந்த காவலாளி உண்டியல் உடைக்கப் பட்டிருப்பதையும், வாலிபன் ஒருவன் மூர்ச்சித்துக்கிடப்பதையும் கண்டு கூக்குரலிடவே கூட்டம் கூடியது. வாலிபன் போலீஸார் வசம் ஒப்புவிக்கப்பட்டான்.

இரவு 3 மணிக்கு ஆலயத்திற்குள் நுழைந்து உண்டியலை உடைத்தபோது யாரோ முதுகில் அறைந்ததுபோல் இருக்கவே, அவன் சுருண்டு விழுந்து மூர்ச்சித்து விட்டானும்.

இப்படியும் நடக்குமா என்பதை தெய்வ சிந்தனை செய்

யும் நாத்திகர்கள் தான் சொல்லவேண்டும்.

இதுநடந்தது சென்னை எழுகிணறு பாரக்ஸ் தெருவிலுள்ள ஆஞ்சநேயர் சந்நிதியில்.

ஆங்கிலத்தில் இந்தியக் கவிதைகள்

"செய்யுள்" (Poetry) சஞ்சிகையின் ஜனவரி இதழ் முழுவதிலும் இந்தியக் கவிஞர் இயற்றிய செய்யுட்களே வெளியிடப்பட்டுள்ளன.

சஞ்சிகையின் கௌரவ ஆசிரியர் தம்பிமுத்து அவற்றைப் பதிப்பித்துள்ளார். தென் கிழக்கு ஆசியாவின் 37 கவிஞர்கள் எழுதிய கவிதைகள் அதில் வெளியாகியுள்ளன. தற்கால வங்காளக் கவிதையின் தந்தை தாகூரின் கவிகள் முதல் இளங் கவிஞர் ராயப்புரோலு ஸ்ரீனிவாஸ் எழுதியவை வரை அதில் வெளியாகியுள்ளன. ஸ்ரீனிவாஸ் இந்தியாவில்ஒரு இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராக இருக்கிறார்.

வெளிநாட்டு கவிதைகளை இந்தச்சஞ்சிகை இதற்குமுன் இரண்டு தடவை வெளியிட்டுள்ளது. இது இறுதியான மூன்றாவது வெளியீடு.முதல் வெளியீட்டில் ஜப்பானியக் கவிஞர்களின் கவிதைகள், 1956 மே மாதம் வெளியாயின. இரண்டாவது வெளிநாட்டுக் கவிதைப் பதிப்பில் இஸ்ரேலி ஆசிரியர்களின் கவிதைப் படைப்புகள் சென்ற ஜூலையில் வெளியிடப்பட்டன.

புத்த தேவா போஸ், நரேஷ் குஹா, ஜீவானந்த தாஸ், அமியா சக்கிரவர்த்தி, அம்ருத பிருதம், இக்பால், ஜி. சி. மொஹாந்தி, டாம் மோரஸ், வி. கே. கோகேக், பாலாமணிஅம்மா, ஜி. சங்கர சரூப், உமா ஷங்கர் ஜோஷி முதலியோரின் கவிதைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன.

அமெரிக்க ஆதரவுபெற்ற ஆசிய தர்ம ஸ்தாபனத்தின் நன்கொடையைக் கொண்டு தான் இந்தக் கவிதை இதழை வெளியிடுவது சாத்தியமாயிற்று.

வரப்பெற்றோம்

சேலம் கிச்சுப்பாளையம் குலால இளைஞர் சங்க வெளியீடான கிளிக்குறள் என்ற கையடக்கப் பதிப்புநூல்வரப் பெற்றோம். ஆன்மீகம், தெய்வீகம், நல்லொழுக்கம், நற்சீலம் இவற்றை போதிக்கிறது இந்நூல். அறிவுப் பிரசாரத்திலீடுபட்டுள்ள சங்கத்தாரைப் பாராட்டுகிறோம்.

★ நடந்தவை ★

மதுரையில் பேப்ரிகேட்டர்ஸ் நிர்வாகக் குழு கூட்டம்

மதுரையில் 6—2—59 தேதி மாலை 3-மணிக்கு தொழில் ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ராஜ்ய பேப்ரிகேட்டர்களின் ஜெனரல்பாடி கூட்டம் திருச்சியில் பிப்ரவரி மாதம் 22-தேதி நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

காரியதரிசி பி. எச். நஸீருதீன் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

விருதுநகரில்

ஸ்ரீராமகிருஷ்ணா அன் கோவுக்கு விஜயம் செய்து அங்கு தயாரிக்கப்படும் இயந்திர அறவை சல்லடை தயாரிப்புக்களை ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்களும், சென்னை நகர சபை உறுப்பினர் ஸ்ரீ எம். பார்த்தசாரதி அவர்களும் பார்வையிட்டுப் பாராட்டினர். நுட்பமான இந்தத் தொழிலுக்கு அரசாங்கம் ஆதரவு புரிந்து வளர்ச்சியுறச் செய்தல் அவசியம் என்று அவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

திருநீலகண்ட நாயனர் குரு பூசை

திருநீலகண்ட நாயனர் குருபூஜையை முன்னிட்டு மைலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் பகல் 12-மணிக்கு அபிஷேக ஆராதனையும் மாலை 6 மணி முதல் 8 மணி வரையில் ஸ்ரீ திருநீலகண்ட நாயனரின் வாழ்க்கை சரித்திரம் காலட்சேபமும் நடைபெற்றன. இரவு சுவாமி திருவீதிவலம் நடந்தது.

* * *

சென்னை சூளை அங்காளம்மன் ஆலயத்தில் சூளை திருநீலகண்டநாயனர் சபையினரால் திருநீலகண்ட நாயனரின் குருபூஜை விழா கொண்டாடப்பட்டது.

இவ்விரண்டு விழாக்களிலும் "தொழில்" ஆசிரியர்

ஸ்ரீ கே. பெருமாள் உடையார் கலந்து கொண்டார்.

* * *

சத்தியமங்கலம் பவானி ஈசுவரர் ஆலயத்தில் 1—2—59 ஞாயிறு காலை ஸ்ரீ திருநீலகண்டநாயனர் குருபூசை விழாகொண்டாடப்பட்டது. அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன. ஸ்ரீ பெரியண்ணன் அவர்களால் கதா காலட்சேபம் நடத்தப்பட்டது. இரவு திரு வீதி உலா நடந்தது.

* * *

கோபிசெட்டிப்பாளையம் பாரியூர் சிவாலயத்தில் ஸ்ரீ திருநீலகண்டநாயனர் குருபூசை விழா கொண்டாடப்பட்டது. ஸ்ரீ எ. ராஜகோபால் குழுவினரின் பஜனை நடந்தது. ஸ்ரீ ராமசாமி பி.எ.பி.டி., அவர்கள் தலைமையில் ஸ்ரீ வி. ஆர். வேலப்ப உடையார் அவர்களும், ஸ்ரீ டி. ஆர். பழனியப்பன் அவர்களும் பேசினர். ஸ்ரீ டி. எஸ். நஞ்சப்ப செட்டியாருக்கு நாயனர் என்ற பட்டம் வழங்கப்பட்டது, ஸ்ரீ என். என். பழனியப்பன் வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிவுற்றது.

* * *

29-1-59 கரூரில் புதிதாய் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ திருநீலகண்ட நாயனர் ஆலயத்தை ஸ்ரீ முத்தப்ப செட்டியார் தலைமையில் ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை திறந்து வைத்தார். அன்ஞரால் திருநீலகண்ட நாயனர் சரித்திரச் சொற்பொழிவும், ஸ்ரீ கே. ராமசாமி உடையாரால் தம்பதிகள் பக்தி, வைராக்கியம் முதலியவற்றைப் பற்றிய உபந்நியாசமும் நடந்தது. அன்னதானமும் நடந்தது.

ஓராண்டில் 11,000 புதிய புத்தகங்கள்

சென்ற ஆண்டில் மொத்தம் 11,012 புதிய புத்தகங்கள் அமெரிக்காவில் மாத்திரம் வெளியாகியுள்ளன. 1957-ம் ஆண்டுக்கு இத்தொகை 451 அதிகம். Publishers Weekly என்னும் பதிப்பாளர் வார சஞ்சிகை இந்த விவரத்தை வெளியிட்டுள்ளது. விஞ்ஞானம், தொழில் நுட்பம், இராணுவக் கலை, நுண் கலைகள் ஆகியவை பற்றிய புத்தகங்கள் 304-லிருந்து 409 ஆகியுள்ளன. ஐந்து புத்தகங்களும் அதற்கு அதிகமாகவும் 342 பதிப்பாளர்கள் வெளியிட்டிருக்கிருர்கள்.

★ திருமணங்கள் ★

சென்னை சிந்தாதிரிப்பேட்டை சாமிநாய்க்கன் தெருவில் உள்ள கல்யாண மண்டபத்தில் 29-1-59 தமிழரசு கழக உறுப்பினரான ஸ்ரீ வெ. ஏகாம்பரத்திற்கும, சௌ. சரோஜாவிற்கும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. மேயர் கமலக்கண்ண முதலியார், உதவி மேயர் திருவேங்கடம் பிள்ளை, சரஸ்வதி பாண்டுரங்கம், கவி. கா. மு. ஷெரீப் போன்ற முக்கியஸ்தர்கள் விஜயம் செய்து மணமக்களைப் பாராட்டினர்.

* * * *

தென் இந்திய ரயில்வேசிப் கமர்ஷியல் சூப்பிரன்டண்ட் ஆபீசைச் சேர்ந்த ஸ்ரீ என். துரைராஜ் அவர்கள் சகோதரர் ஸ்ரீ என். பழனிச்சாமிக்கும், சௌ. சிவராணிக்கும் ராயப்பேட்டை ஹைரோட்டிலுள்ள திருமலை திருப்பதி தேவஸ்தான தகவல் அறிவிப்பு நிலயத்தில் 29-1-59 காலை அதி சிறப்பாக திருமணம் நடந்தேறியது. உறவினர்களும் நண்பர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். மணமக்களுக்கு பரிசுகளும் வாழ்த்துரைகளும் வழங்கினர்.

* * * *

மதுரையில் பிரபல திருமணம்

புதுக்கோட்டை முஸ்தபா மார்ட் உரிமையாளர் ஜனப்

ஸ்ரீ வெ. ஏகாம்பரத்தின் திருமண விழாவில் ஆசி கூறிய முக்கியஸ்தகள்

ம. இ. பா. முகமது இஸ்மாயில் அவர்கள் புதல்வி உம்முராஜியா பேகத்திற்கும், மதுரை ஜனுப் இ. கான்ஸா ராவுத்தர் அவர்கள் குமாரர் அப்துல் காதர் ஜைலானிக்கும் மதுரை உப்புக்கார சந்து 17-நம்பர் இல்லத்தில் 6—2—59 காலை அதிசிறப்பாக திருமணம்நடந்தேறியது. அவ்வயம் ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் விஜயம் செய்து வாழ்த்துரைகளும், பரிசுகளும் வழங்கினர். தொழில் ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினுர். முகம்மது இஸ்மாயில் அனைவர்க்கும் வந்தனோபசாரம் கூறினுர்:

* * *

பம்பாய் எ. ஜி. ஆபீஸ் சூப்பிரன்டண்ட் ஸ்ரீ கே. தண்டபாணி எம். ஏ. அவர்கட்கும், செள. சரஸ்வதிக்கும் 29-1-59 காலை சென்னை ராயப்பேட்டை மாவடி விநாயகர் கோவில் தெரு, 1-ம் நெம்பர் வீட்டில் திருமணம் நடைபெற்றது உறவினர்களும், நண்பர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். மணமக்களுக்குப் பரிசுகளும், வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன.

மணம், குணம் ஒருங்கே அமைந்த

மரகதம் காபியை

உபயோகியுங்கள்

மொத்தமாயும், சில்லரையாயும் கிடைக்கும்
அன்றுடம் வறுத்து அரைத்து கொடுக்கப்படும்

K. ராமசாமி உடையார்,
பூரண உரிமையாளர்,
மரகதம் காபி ஒர்க்ஸ்
கரூர்.

பொதுமக்களிடத்தில் நம்பிக்கை

லிங்கன்: என் வலிமை பயனற்றுப்போனுல், இந்தப் பொதுமக்களின் வலிமையை நான் நாடுவேன்; அவர்கள் எந்த நிலைமையிலும் பயனற்றவர்கள் ஆகமாட்டார்கள் என்பது என் எண்ணம்.

காந்தி: அதிகாரம் மக்களிடத்தில் உள்ளது, அவர்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிந்து கொள்வோரிடம் அதனைத் தற்காலிகமாகவேஒப்படைத்துள்ளனர்.

நிராசை

மாமல்லன்

உலகம் ஒருமுகமாக புகழ்ந்தது வைரத்தீவின் பேரழகி ஊர்வசி தேவியை. அவள் காலத்தில் நடந்ததாக கற்பனை செய்யப்பட்டது இது. தென்னாட்டு வீரனான காளிங்கனின் அழகும், கீர்த்தியும் பாரறிந்தவை. அவ்வீரனின் மேனியின் அழகையும், உள்ளத்தின் திண்மையையும் செவியுற்ற ஊர்வசி தேவி அவன்மீது தீராத ஆசை கொள்கிறாள், அவனைக் காண துடிக்கிறாள்...

தோற்றம்—1

இடம்: வைரத்தீவு பைங்கிளி ஊர்வசி பஞ்சணையில் சாய்ந்தபடி காளிங்கனின் எழிலுருவை மனதில் எண்ணி புரண்டு கொண்டிருக்கிறாள். உறக்கம் பிடிப்பதாய் இல்லை. அவளிருப்பது வைரத்தீவு, ஆயினும் எண்ணமெல்லாம் தமிழ் நாட்டினை சுற்றி வட்டமிட்டது.

கனவிலும் நனவிலும் அவனைப் பற்றிய சிந்தனையால் உடல் இளைத்துப்போனாள்.

(உறக்கத்தில் ஓர் நாள், காளிங்கனின் சுந்தர வடிவம் அவள் கண்களுக்குப்புலனாகிறது.)

ஊர்: வந்தே விட்டீர்களா! நீங்கள் வந்தே விட்டீர்களா! வராதிருந்து என் ஆசையை நிராசையாக்கி விடுவீர்களோ என்று பயந்தேன்... ஆண்களில் அழகர் நீர்! பெண்களில் அழகி நான்! மதுர கீதம் பாடும் தமிழகத்து வண்டுநீர், வைரத்தீவு

என்னும் பூங்காவில் எழில் பரப்பி பூத்த ரோஜா மலர் நான்! உம் வரவை, எத்தனை காலமாக எதிர்நோக்குவது? என் அன்பு வெள்ளமே! காலம் வீணுகக் கூடாது! என் உள்ளம் தாளாது! வாரும் மன்னு வாரும்!

என்று சொல்லிக் கொண்டே,பஞ்சணையைவிட்டெழுந்து பிரமை கொண்டு தழுவுகிருள். அருவத்தை உருவமாய் எண்ணிஞல் பயன்படுமா? அதன்பயனுய் ஒரு மண் தொட்டி தரையில் விழுந்து உடைகிறது, தூள் தூளாக! அப்போது...

அவள் மனம்:— பார்த்தாயா பேதையே, பார்த்தாயா? எட்டாதூரத்தில் அந்தத் தமிழ் நாட்டான் இருக்க, நீயிங்கே வீணுசைப் படுகிருயே!...கனகமணிக் கட்டிலிலே பண்பெண்கின்ற பஞ்சு மெத்தையிலே படுத்துறங்கும் புரவலர் மரபிலே உதித்த அந்த வீரச் செம்மலை நீ மனத்தால் எண்ணுவது கூடத் தகாதே!...நீ உடைத்த பூந்தொட்டியைப்பார்! உன் விபரீத ஆசையால் அந்தத் தொட்டிக்கு ஏற்பட்ட அழிவைப்பார்! அதே நிலை உன் வாழ்விற்கும் ஏற்பட விரும்புகிருயா...பேரிடி பைத்தியக்காரி! நீ புத்திசாலியாய் இருந்தால் ஆசை என்னும் தொட்டியை உடைத்துவிடு! உம், உடைத்து விடு!

ஊர்: ஊம். ஊம், நான் மாட்டேன்; சாவதற்குமுன் நானந்தச்சிந்தைக் கினியவருடன் இன்புற்றே தீருவேன்! எனக்குச்சாவு பெரிதல்ல, அந்த ஆணழகனை அடைந்து ன்புறுவது தான் பெரிது. அவரே எனக்கு உயிர், உடல், பொருள் எல்லாம். நாளைக்கு அவருக்கு செய்தியனுப்புவேன்!

(அவள் மஞ்சத்தில் படுக்கிருள். அந்த இரவில் ஐந்தாறு முறைகள் தரையில் விழுகிருள், காளிங்கனை எண்ணிப் புரள்வதால்)

தோற்றம் — 2

(இடம்: சேலையூர் அரண்மனைப்பூங்காவில் காளிங்கன் உலவிக் கொண்டிருக்கிருன். பௌர்ணமி நிலவு. அவன் மனப்புயலை அடக்கமுடியாது தவிக்கிருன்)

காளி: (தனக்குள்) நாளைக்கே செல்ல வேண்டும் அந்த வைரநாட்டு ரஞ்சிதத்தைக்காண. "காதலால் கருத்தழிந்தேன்! தங்களுக்

காகவே பிறந்தேன். அருகில் வாரும் தமிழ் வேந்தே!" என்று சேதியனுப்பிய செவ்வலரி மேனியாள் எவ்வளவு ஏங்கி வாடியிருப்பாள் அங்கே. நானங்கே போய் அந்தக் கொஞ்சு மொழியாளிடம் என் நெஞ்சம் குளிரப் பேசி குதூகலமடைவேன்; இங்கே என் மக்கள், நான் போர் செய்து விட்டு வெற்றி விருதுகளோடு திரும்பிவரும் நன்னாளை நினைவில் வைத்து எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்...

(அப்போது அவன் மனைவி பரிமளா அங்கு வருகிருள்)

பரி: அரசே! நாளை நீங்கள் போர்புரிய புறப்படப் போகிறீர்கள், இந்த இரவு நிலா வீணாகவேண்டாம். வாருங்களரசே! நடுநிசி யாகிறது.

காளி: (தன் எண்ணங்களை மறைத்துக்கொண்டு) தேவி! பகைவர் புறமுதுகிட்டோடுவதை மனக் கண்ணால் சிருஷ்டித்து களித்துக்கொண்டிருக்கும்போது, நீ வந்து கெடுத்து விட்டாயே!

பரி: உறங்கினல் அந்தக் காட்சி நினைவுக்கு வராதா நாதா.

காளி: உன்னோடு பேசவே நேரமிருக்காது அங்கே.

பரி: இன்றைக்குதானே, இங்கே நிம்மதியாக இருக்கப் போகிறீர்கள்...பிறகு உங்கள் செவியில் படுவதெல்லாம் போர் முரசும், யுத்த கோஷமும் தாமே...வாருங்கள் நாதா...

(என்று சொல்லி கையைப் பிடித்திழுத்து செல்கிருள் பரிமளாதேவி)

தோற்றம்—3

நடுக்கடலில் ஒரு தீவு, எழில் நிறைந்த உயர் மாளிகையின் ஜன்னலருகே ஊர்வசி நின்றுக் கடலையே பார்த்துக் கொண்டிருக்கிருள். குளிர்காற்று அவளுடலைத் தொடுகிறது. உள்ளத்தில் வேட்கை அதிகரிக்கின்றது. வானத்து நட்சத்திரங்கள் அவளின் ஆசையைப் பார்த்து கண் சிமிட்டுகின்றன.

ஊர்: அவர் இன்னும் வரக்காணேமே... தமிழகத்து வேந்தரெல்லாம் மங்கையரை இப்படித்தான் வேதனைத் தீயில் தள்ளி வேடிக்கைப் பார்ப்பார்களோ! தமிழ் நாட்டாரின் வாழ்வே இனிமை

நிறைந்தது, வீரம் நிறைந்தது, என்கிறார்களே என் நாட்டுத் தூதுவர்கள். அப்பேர்ப்பட்ட தமிழ் மன்னர் என்னை ஏன் தவிக்கவிட வேண்டும்? இன்னும் காணோமே! கடலை கடந்து வர கலங்கவில்லையோ அவர் நாட்டில்...! சேச்சே! அப்படி இருக்காது... திரை கடல் கடந்து அயல் நாட்டில் வீரத்தைக் காட்டும் மாவீரர்களாயிற்றே அவர்கள். ஒருவேளை புயலில் சிக்கினாரோ...!

அப்போது மூன்று பெரிய கப்பல்கள் கடற்கரையை அடைகின்றன. ஒரே ஒரு உருவம் மாத்திரம் அதினின்றும் இறங்கி வருகிறது, அந்த மாளிகையை நோக்கி... அதைக் கண்ணுற்றதும் அவள் வந்து விட்டார் என்னைக் கண்ணாளர்! அதோ அதோ வருகிறார்! தென்றலைப் போலவே அவர் பேசும் பேச்சும், கொஞ்சும் மொழியும், தீஞ்சுவைக்கனிரசமாய் இனிக்கும்!

இவ்வாறு அவள் இன்பக் கனவுகண்டு கொண்டிருக்கும்போது கதவு தட்டப்படும் ஓசைக் கேட்கிறது.



தமிழ் சுருக்கெழுத்து நூற்கள் வெளியீட்டு விழாவின்போது கல்வி மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமண்யம் பேசுகிறார்.

ஓடி வந்து கதவைத் திறக்கிருள், எதிர்நிற்கும் காளிங்கனின் அழகைக்கண்டு திகைக்கிருள்.

காளி: "ஏனிந்த திகைப்பு தேன் மொழியாளே... தமிழ் நாட்டாரை இன்று தான் முதன் முறையாகக் காண்கிருயா?"

அவன் கேட்ட கேள்விகள் அவள் காதில் பட்டால் தானே? கண்களில் நீர் வழிந்தது. அது ஆனந்தக் கண்ணீர் என்பதை நாம் விவரிக்க வேண்டுமோ! மண்டியிட்டு வணங்கினுள். பிறகு எழுந்துநடந்தாள். அவளைத் தொடர்ந்தான் காளிங்கன். இருவரும் சப்ரகூட மஞ்சத்தை யடைந்தனர். காளிங்கன் பஞ்சணையில் அமர்ந்தான்.

(அவள் பேசாது பொற்கிண்ணத்தில் குளிர்ந்த இனிப்பு பானம் ஊற்றித்தருகிருள். அவன் குடிக்கிருன். தமிழ்நாட்டு முத்துக்கள் பதிக்கப்பட்ட அவள் தலை முடியைப் பார்த்து விட்டு)

"தென்னுட்டு முத்துக்கள் உன் பொன்மேனிக்குப் பொலிவைத் தருகின்றன! பாரதம் காணுத அஞ்சுகமே! பணித்தூங்கா பூங்கொத்தே...!"

ஊர் : நெடு நாளையக் கனவுக்கப்புறம், இன்று தான் அரசே நினைவுக்கு வருகிறது! இந்தத் தமிழ் நாட்டு முத்துக்களை நான் நீண்ட காலமாய் தரித்திருக்கிறேன்!

காளி: அதன் பின் கேட்பானேன். காலம் போவதே தெரியாமல் மனம்விட்டு பேசினர். அவ்வமயம் ஒரு எழில் குமரன் அங்கே வருகிருன். அவள் வந்தவனைக் கட்டித் தழுவி முத்தம் தருகிருள்... மனம் கசக்கிருன் காளிங்கன் திரும்பி விடுகிருன் அவள் நடத்தையைக் கண்டு...வந்த வாலிபனை வழியனுப்பிவிட்டு காளிங்கனை தொடர்ந்து வருருள் அவள்.

ஊர் : போகாதீர் வேந்தே! போகாதீர். என்ன கோபம்?

காளி : எட்டி நில்! தொடாதே என்னை! பாரதத்தார் பண்புக்கு இது ஏற்றதல்ல! எங்கள் நாட்டில் ஒரு நங்கை அந்நியன் முகத்தை ஏறிட்டும் பாராள். ஒரு மணாளனைத் தான் மணப்பாள். கானல்நீர் என் கண்களை ஏமாற்றிவிட்டது...எட்டிக்காயைச் சுவையுள்ள கனி என்று எண்ணி

கைத்தொழில் முறை புத்தகங்கள்

செல்வச் சுரங்கம்
தபால் செலவு உள்பட ரூ 2—65

தொழிலே திரவியம்
தபால் செலவு உள்பட ரூ 1—65

முன்பணம் அனுப்பிப் பெறவும்

கே. ஜி. ராஜா,

16, சுப்பராய பிள்ளை தெரு,
சென்னை-1.

வந்து ஏமாந்தேன். எங்கள் நாட்டாரின் கலாச்சாரத்திற்கு இந்நாடு மாத்திரமல்ல, எந்நாடும் ஈடாகாது...பேய் மனம் படைத்த உன்னைப் பத்தினிப் பெண் என்றெண்ணி விட்டேன். கண்ணாடிக் கல்லை கோமேதகம் என்று தப்புக் கணக்குப்போட்டு விட்டேன்! ...உன்னை ஒரு புது ரோஜா என நம்பினேன். இப்போது தான் தெரிகிறது நீயொரு கசங்கிய மலரென்று...!

ஊர் : என் சிந்தைக் குழம்புகிறது. கோபத்தை மூட்டுகிறது, மாவீரரே உங்கள் பேச்சு...தென்றல் புயலாக மாறினல் தப்ப முடியாது நீங்கள்...நினைத்துப் பார்த்து நிதானமாய் நடந்து கொள்ளுங்கள்.

காளி: சீ நாயே! பாரதர் உடலில் ஓடுவது செந்நீர்... வீரர் பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள். கலம் பல சென்று வெற்றிப் பல பெற்றவர்கள் நாங்கள்! என்னைத் தீண்ட முயன்ருல் உன் இனமே பூண்டுடன் அழிந்து போம்...

ஊர் : பார்த்து விடுவோம் அதையும்...

[அவள் கைதட்ட, மறைந்திருக்கும் வைரத் தீவின் வீரர்கள் பாய்ந்தோடி வருகிருர்கள், அவனைப் பிடிக்க! அதே சமயத்தில் பாரத வீரர்களும் அங்கு வந்து விடுகிருர்கள். நடக்கிறது போர்... போர் என்ருலே திணவெடுக்கும் தோளர்களாயிற்றே பாரதர்! நடக்கிறது வீரப்போர்! வைர வீரர்கள் எடுத்தார்கள் ஓட்டம் உயிருக் கஞ்சி! அவர்களையும், ஊர்வசிதேவியையும்கை தாக்குகிருன் காளிங்கன்.

தோற்றம்—4

"வைரத் தீவுக் கப்பலில் ஊர்வசி தேவியும் அவள்

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

வீரர்களும் கைதிகளாய் இருக்கிறார்கள். காளிங்கனால் நியமிக்கப் பட்ட ஒரு வைரத் தீவு வாலிபனுடன் காளிங்கன் பேசுகிறான்"

காளி: சென்று வாருங்கள்! உம் நாட்டு மன்னரிடம், என் நாட்டு வணக்கத்தைத் தெரிவியுங்கள் உங்கள் ராணியின் சொல்லுக்காக நம் நண்பர்களான உங்களிடம் போர் செய்ய நேர்ந்துவிட்டது, ஆனாலும் நெறி தவரவில்லை. என்றே எண்ணுகிறேன்.

வை: உங்கள் நேர்மைக்கு சிரம் குனிகிறேன். இது போல் அவல நிகழ்ச்சி இனி மேல் எம் வைரத்தீவில் நடவாது வேந்தே! சென்று வருகிறேன். வாழ்க பாரதம்... வாழ்க காளிங்கர்...!

கப்பல் புறப்படுகிறது. காளிங்கனும், அவன் படை வீரர்களும் பாரதத் தீவை யடைகின்றனர்.

ஜலதோஷம் வராமல் தடுக்க 'அம்மைப்பால்'

ஜலதோஷம் பிடிப்பதற்கான காரணங்களில் பெரும்பாலானவற்றை முறியடிக்க அமெரிக்கமருந்து கம்பெனி ஒன்று விரைவில் ஒரு அம்மைப் பால் விற்பனைசெய்யத் திட்டமிட்டுள்ளது. தடுப்பு அம்மைப்பால் ஒன்றையும் அது விற்பனை செய்யும். வருஷம் முடிவதற்குள் இரு அம்மைப்பால்களும் விற்பனைக்குக் கிடைக்கும் என்று பார்க் டேவிஸ் கம்பெனியின் தலைவர் ஹாரி ஜே. விடன் இங்கு கூறினார்.

அம்மைக் கட்டு (புட்டாளம்மன்) நோய்த் தடுப்பு அம்மைப் பால் ஒன்றையும் தம் கம்பெனி தயாரித்து வருவதாகவும், இரு ஆண்டுகளுக்குள் அது விற்பனைக்கு வருமென்றும் அவர் கூறினார்.

ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கைச் சரிதம்

(1) 1809-ல் பிறந்த லிங்கன் இள மையில் கல்வி யறிவற்றவராயும், பண்ணை வேலையாளாயுமிருந்தார்.

(2) லிங்கன் 7 வயது சிறுவனு யிருந்தபோது வனப்பிராந்தியமான இந்தியானுவுக்கு குடும்பம் மாற்றப் பட்டது. அங்கே வீடு கட்டி குடி யேறினுர்கள்.

(3) தாயை இழந்த சிறு குழந்தைகளை விட்டு தந்தை காட்டு வேட்டைக்குப் போய் விடுவார். 9 வயதுள்ள லிங்கன் தங்கையை பாது காப்பார்.

(4) தந்தை புது மனைவியைத் தேடிக்கொண்டார். அவள் ஓர் விதவை. ஓர் பையன், இரண்டு பெண்களோடுவந்த அவள் வீட்டை முன்போல் அழகு படுத்தினாள்.

(5) மாற்றுந் தாயின் பிடிவாதத்தால் லிங்கன் பள்ளிக்குப் போனார். ஆனால் பண்ணை வேலை காரணமாய் அவர் தொடர்ந்து பள்ளிக்குப் போக முடியவில்லை.

(6) ஓய்வு நேரத்தில் அடுப்படியில் அமர்ந்து படித்தும், எழுதியும் கல்வியில் அபிவிர்த்தி யடைந்தார் லிங்கன்.

(7) 22-ம் வயதில் இல்லினுய்ஸ் எல்லைப்புற ஸ்டோரில் குமாஸ்தாவாய் பணி புரிந்தார் லிங்கன்.

(8) 25-ம் வயதில் லிங்கன் அரசியலில் ஈடுபட்டார். 1834-ல் அவர் இல்லினுய்ஸ் சட்ட சபைக்கு அங்கத்தினராய் தேர்ந்தெடுக்கப்பட்டார்

(9) லிங்கன் முதலில் காதலித்த ஆன்ரட்லட்ஜ் என்ற நங்கை மணமாகுமுன் இறக்கிறாள். அதனால் மனமுடைந்த லிங்கன் மேரிடாட் என்ற மங்கையை 1843-ல் மணக்கிறார்.



(10) லிங்கன் தமது 37-ம் வயதில் காங்கிரஸ் கீழ்ச் சபை அங்கத்தினராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

(11) அடிமை முறையை கட்டோடு எதிர்த்து வந்த லிங்கன் ஜனாதிபதியாய் 1860-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். யூனியனில் சேர்ந்திருந்த 11 தென் பிராந்திய நாடுகள் பிரிந்தன.

(12) *1861* - லிருந்து *1865* வரை நடந்த உள் நாட்டு போரின் மூலம் அடிமை முறையை ஒழிக்க வேண்டிய பெரும் பொறுப்பு அவரை சார்ந்திருந்தது.



(13) *1864*ல் மீண்டும் ஜனாதிபதியாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



(14) *1865*ல் உள்நாட்டுப் போர் முடிவான வெற்றியைக் கண்டது.

(15) யுத்தம் முடிந்த 5 நாட்களுக்குப் பின் வாஷிங்டனிலுள்ள நாடக சாலையில் தென் பிராந்திய நடிகனுன ஜான்வில்க்ஸ் பூத் என்ற வெறியனுல் சுட்டுக் கொல்லப் பட்டார்.

(16) மக்களாட்சி யென்றும், ஜனநாயக ஆட்சியென்றும் சொல்லப்படுவதற்கு அறிகுறியாய் விளங்குகிறது லிங்கனின் திருநாமம்.

கருத்துரை :

கடன் வாங்கி கல்யாணம்

மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள் நெறியை மையமாக வைத்து, சக்ரபாணி சதாசிவ பிரம்மம், பிரசாத் ஆகிய மூவரும் அற்புதமான ஓர் கதையைப்பின்னி இருக்கின்றனர். எந்த ஒரு கருத்தையும் நகைச்சுவையுடன் கலந்து கொடுத்தால் தான் மக்கள் திருந்துவார்கள் என்ற தளராத நம்பிக்கை கொண்டவர்கள் விஜயா புரொடக்ஷன்ஸார் எனவேதான் குறள்நெறியை எளிய நகைச் சுவைக் கதையாக்கி 'கடன் வாங்கி கல்யாணம்' என்ற பெயருடன் தமிழகமெங்கும் பவனி வரச் செய்திருக்கின்றனர்.

தன்னலமே பெரிதெனக் கருதும் திவான் பகதூர் தர்மலிங்கம் பிள்ளை, தான் பெரிய மனிதராவதற்காக எந்தச் செயலையும் செய்ய துணியக் கூடியவன். பிறன்கேடு சூழ நினைக்கும் அவனுக்கு அவனுடன் பணியாற்றும் காரியதரிசியும் அவன்

பிள்ளையுமே தடுத்து அறம் காத்து அவனையும் காக்கின்றனர். இடையிலே தான் கருத்தைக் குளிரவைக்கும் கதை ஓட்டம். இதயத்துக்கு இன்பமளிக்கும் கருத்து மிக்க நகைச்சுவைக் காட்சிகள்.

நாடு காக்கும் நல்லவன்! அவனுக்கு அதற்காக கிடைத்த பரிசு கொடும் சிறை! சிறை மீண்டுவரும் இளங்காளை, தேசியத் தொண்டன் நாகராசனை-கணேசனை-எதிர் கொண்டு அழைத்து மாலை போடுகிருர் எழிலரசி மஞ்சுளா. அவர்கள இருவரும காதல் ஜோடிகள். இருவரையும் பிரிக்கும் பெரிய வில்லன் நடமாடவில்லை யென்றுலும் மஞ்சுளாவின் தந்தையே காரணமாயிருக்காரே! மஞ்சுளாவை அடைவதற்காக நாகராஜன் படும்பாடு அடேயப்பா!

நாகராஜன் பாகம் கணேசனுக்கு மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. டகல் பகதூர் ராஜாவாகவும், சந்நியாசியாகவும் வந்து ஐமாய்க்கிருர். லண்டன் சென்று திரும்பிய தியாகுவைப்போல் தானும் மஞ்சுளாவின் கன்னத்தில் தட்டி கையைக் குலுக்குவதற்காக வேலைக்காரனிடம் ஒத்திகை பார்க்கும் கட்டத்தில் கணேசன் நடிப்பு தெள்ளிய நீரோடைபோல் காட்சி அளிக்கிறது. அந்தக் கட்டம் பிரசாத்தின் சிறந்த டைரக்ஷனுக்கும் ஒர் எடுத்துக் காட்டாய் விளங்குகிறது.

சாவித்திரிக்கு மஞ்சுளாவின் பாகம்! அழகானதோற்றம், இதயத்தைக் கவரும் இளம்புன்னகையுமே இப்பாத்திரத்துக்கு போதுமானது என்ருல் அதை வெற்றியுடன் செய்துமுடிக்க சாவித்திரியால் முடியாததா என்ன? கச்சிதமான நடிப்பு!

கதையின் கதாநாயகன் கணேசன்! இருந்தாலும் அவனையும் ஆட்டி வைப்பவனுக நமச்சிவாயம் வருகிருன். அந்தப் பாகம் தங்கவேலுவுக்கு ஒரே ஆர்ப்பாட்டந்தான். படம்முழுவதும் நகைச்சுவையின் கருவே அவர்தான் என்ருல் அவர் நடிப்பில் குறை காணமுடியுமா? அவர்காதலி உஷா! அவள் தான் சரோஜா! கச்சிதமாய் நடித்திருக்கிருர். "காசிக்கு போனேனே ராமாஹரே" என்ற நமச்சிவாயத்தின் பாடலுக்கு எதிர்பாட்டுப்பாடி கங்கை தீர்த்தத்தை கார்ப்பரேஷன் ஜலம் ராமாஹரே என்று கூறி அவர் முகத்

திலே ஒளிந்தோடும் அபி நயம் வெகு அற்புதம்!

பாலையாதான் தர்மலிங்கம் பிள்ளை! ஒரே வரியில் கூற வேண்டுமானால் இணையற்ற நடிகர் என்பதைக் காட்டி விட்டார்!

அவர்மகன் - தியாகுவாக - ராமச்சந்திரன்! அவர் தான் ஆல் ரவுண்ட் நடிகராயிற்றே!

ஜமுனா ஊமையாக-இல்லை. ஆக்கப்பட்டு-நடிக்கிறார். அற்புதமான நடிப்பு. நடிப்புக்கு பேச்சுத்தான் முக்கியம் என்பதை உடைத்தெறிந்து விட்டு இதய உணர்ச்சிகளை முகத்திலேயே சுடர்விடச் செய்யலாம் என்பதை எடுத்துக்காட்டி விட்டார்.

ரங்காராவுக்கு மாமூல் வேஷம்! நாகராஜன், தான் ராஜா அல்ல என்பதை எழுதிய கடிதத்தை பாதிவரை படித்துவிட்டு கடைசி வரிகளைப் படிக்காமலேயே கடிதத்தை மகளிடம் கொடுத்து விடுகிறாரே! அப்போது அவர் எவ்வளவு தத்ரூபமாய் நடித்திருக்கிறார்.

சாரங்கபாணி கருணாநிதி முத்துலட்சுமி முதலியோரும் நமக்கு நகைச்சுவைவிருந்தளிக்கின்றனர்.

கடன் வாங்கி கல்யாணத்திற்கே முக்கியமாக பாடுபட்டிருப்பவர் ஒளிப்பதிவாளர் மார்க்கஸ் பார்டலே என்பவர் தான்! குளிர்ச்சியான அவரது ஒளிப்பதிவு ரஸிகர்களுக்கு இனியதோர் விருந்தாகும். "எங்கிருந்து வீசுதோ" இனிதாகவே தென்றல்" என்றலீலாவின் பாடலுக்கு அவரது வெளிப்புறக்காட்சிகள் வெகு அற்புதம்.

நாடு காத்த நங்கை என்ற நாடகத்தில் கேவாகலர் படப்பிடிப்பு சிறப்பாக இருக்கிறது. நங்கை விஷம் அருந்தியதும் அவள் முகம் நீலமாக மாறுவது போல் காட்டுவது பார்டலேயின் ஆழ்ந்த டெக்னிக் திறமையைக் காட்டுகிறது.

கண்களுக்கு பார்டலேயின் படப்பிடிப்பு விருந்தைப் போல காதுக்கு இனிய விருந்தை அளிக்கிறார் நண்பர் ராஜேஸ்வரராவ். படம் முழுவதும் அவரது இனிய இதமளிக்கும் இசையை மனங் குளிர கேட்டு இன்புற முடிகிறது.

உன் செவியில் கேளாத தேனோ-சுவாமி என்ற பாடலின் பின்னணி இசை வெகு அற்புதம். இடையே இடையே கிளாரினட் இசையை மட்டும் இழையவிட்டு நமக்கு இன்பமூட்டுகிறார்.

பாடல்களை வசனம் எழுதிய ராமய்யாதாஸே எழுதி

இருக்கிறார். அவருடைய முத்திரையை தூத்துக்குடி சாத்துக்குடி, தாராவின் பார்வையிலே ஒரு வெண்ணிலாவே. "ஆனந்தம் பரமானந்தம் பால கிருஷ்ணனின் லீலையை உணர்ந்த" போன்ற பாடல்கள் தெளிவாக்குகின்றன.

படத்தை பிரசாத் டைரக்ட் செய்திருக்கிறார். காட்சிக்குக் காட்சி அவரது திறமையைக் காணமுடிகிறது. ஆனால் சில குறைகளை தெரிந்தும் விட்டிருக்கிறார். நகைச்சுவையே கதையின் பிரதானம் என்ப தால் அவை பெரிதாகப் பட வில்லை.

பார்ட்லேயின் படப்பிடிப்புக்கும் ராஜேஸ்வரராவின் மெல்லிய இனிய இசைக்குமே பணத்தைக் கொடுக்கலாமே! போதாததற்கு முழுக்கமுழுக்க சிரிப்பூட்டும் சம்பவங்கள் இருக்கின்றன என்றால் கடன் வாங்கியாவது பார்த்து விட வேண்டும்.

இல்லாதவர்களுக்கு கடன் கொடுத்தாவது பார்க்கச் சொல்ல வேண்டும்.—சோ. க.

Edited & Published by K. Perumal Udayar,
55, Edapalayam Street, Madras-3. Asst. Editor : K.G. RAJU.
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.

K. P. பரசுராம் பிள்ளை & சன்ஸ்

ஹார்டுவேர் வியாபாரம்,

இரும்பு எஃகு சாமான் பேப்ரிகேட்டர்கள் :

கோவை ஜில்லா "ஈஸ்ட்ராலா"
பாட்டரி விற்பனை ஏஜண்டுகள்.

"தி மெட்ராஸ்
பேன்சி ஸ்டோர்ஸ்"

பொள்ளாச்சி (கோயம்பத்தூர்)

எல்லா பேன்சி சாமான்களும்
மொத்தமாகவும், சில்லரையாகவும்
சரசமாய் கிடைக்கும்